بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْم    نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْم    وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْد

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 21

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

8 ரமலான் 1439 ஹிஜ்ரி கமரி 24 ஹிஜ்ரத் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

24 மே 2018


## அல்லாஹ்வின் கட்டளை

وَاِذَا سَاَلَكَ عِبَادِيْ عَنِّيْ فَاِنِّيْ قَرِيْبٌ ؕ اُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ فَلْيَسْتَجِيْبُوْا لِيْ وَلْيُؤْمِنُوْا بِيْ لَعَلَّهُمْ يَرْشُدُوْنَ ○

(தூதரே) என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றி கேட்டால் நான் அருகில் இருக்கின்றேன். பிராத்தனை செய்பவர் என்னை அழைக்கின்றபோது, நான் அவரது பிராத்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே, அவர்களும் என் கட்டளை -யினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள்.

(அதிகாரம் அல் பக்கரா : 187)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்: 'நூஹ் நபியின் கப்பல்' என்ற நூலிலுள்ள நமது போதனை என்ற பகுதியை ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் சொல்வதென்றால், 'நூஹ் நபியின் கப்பல்' என்ற நூலை முழுமையாகப் படிக்க வேண்டும்.**

**ஹஸ்ரத் எம்பெருமானானார் (ஸல்) அவர்களின் காலத்தை தவிர வேறு எக்காலத்திலாவது கூறப்பட்ட ஆயிரக்கணக்கான முன்னறிவிப்புகள் சூரியனின் ஒளியைப்போல் நிறைவேறியுள்ளதையும், அவை நிறைவேறியதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் சாட்சியங்கள் அளித்ததையும் எப்போதாயினும் எவராவது கண்டிருக்கின்றாரா?**

# 'நூஹ் நபியின் கப்பல்' என்ற நூலிலிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுக்கள்

எனது முன்னறிவிப்புகளில் நிறைவேறாமல் போனது ஏதும் இல்லை அல்லது அதன் இரு பாகங்களில் ஒரு பாகம் நிறைவேறாமல் போனதாக இல்லை. ஒருவர் தமது மரணம் வரை தேடிக் கொண்டிருந்தாலும் எனது வாயிலிருந்து வந்த எந்தவொரு முன்னறிவிப்பும் நிறைவேறாமல் போனது எனக் கூற முடியாது. ஆனால், ஒருவன் வெட்கமின்றியும் அறியாமையாலும் எதை வேண்டுமென்றாலும் கூறட்டும். ஆயிரக்கணக்கான தெள்ளத் தெளிவான எனது முன்னறிவிப்புகள் மிகத் தெளிவாக நிறைவேறி விட்டன. இதற்கு இலட்சக்கணக்கான மக்கள் சாட்சிகளாக இருக்கின்றனர் என்பதனை வாதிட்டுக் கூறுகிறேன். இந்த ஒப்புமையை, சென்று போன நபிமார்களில் தேடிப் பார்ப்போமேயானால் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களைத் தவித வேறு எங்கும் அதற்கான உதாரணத்தைப் பெற முடியாது. என் பகைவர்கள் இதே வழி முறையின்படி தீர்ப்பு செய்திருந்தால் எப்போதோ அவர்களது கண்கள் திறந்திருக்கும். அவர்கள் இந்த முன்னறிவிப்புகளைப் போன்று ஏதாவது ஓர் உதாரணத்தை உலகில் காட்ட முடியுமென்றால் அவர்களுக்காக ஒரு பெரிய சன்மானத்தை அளிக்க நான் ஆயத்தமாகி இருந்தேன். முழுக்க முழுக்க தீய எண்ணத்துடன் அல்லது அறியாமையில் இன்ன முன்னறிவிப்பு நிறைவேறவில்லை என்று கூறுபவர்களின் கூற்றுக்கள் அசுத்தமானதும் தவறான எண்ணமும் கொண்டவை என்று கூறுவதைத் தவிர நம்மால் வேறு என்ன கூற முடியும்?

ஏதாவது கூட்டமொன்றில் இதே விஷயத்தை ஆய்வுக்காக எடுத்துப் பேசினால் அவர்கள் தங்களது கூற்றிலிருந்து பின் வாங்க வேண்டியிருக்கும் அல்லது அவர்கள் வெட்கங் கெட்டவர்கள் என்று பிறர் அழைக்க வேண்டியதிருக்கும். ஆயிரக்கணக்கான முன்னறிவிப்புகள் அதே விதத்தில் நிறைவேறி இருப்பதும், அவை நிறைவேறியதற்கு ஆயிரக்கணக்கான சாட்சியாளர்கள் உயிருடன் இருந்து வருவதும் ஒரு சிறிய விஷயமல்ல. இது வல்லமையுள்ள கண்ணியத்திற்குரிய இறைவனை வெளிப்படுத்திக் காட்டுவதேயாகும்.

ஹஸ்ரத் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தைத் தவிர வேறு எக்காலத்திலாவது, கூறப்பட்ட ஆயிரக்கணக்கான முன்னறிவிப்புகள் சூரியனின் ஒளியைப்போல் நிறைவேறியதையும், அவை நிறைவேறியதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் சாட்சியங்கள் அறித்ததையும் எப்போதாயினும் எவராவது கண்டிருக்கின்றாரா? எவ்வாறு இக்காலத்தில் இறைவன் அருகில் வந்து தோற்றம் அளித்துக் கொண்டிருக்கின்றானோ, இது போன்றே இக்காலத்தின் உதாரணத்தை கடந்த காலங்களில் மிகக் குறைவாகவே பெற முடியும் என்பதனை நான் நிச்சயமாக அறிவேன். அவன் வானத்திலிருந்து இறங்குவது போல் இக்காலத்தில் அவனது முகம் வெளிப்படுவதை மக்கள் மிகச் சமீபத்தில் கண்டு கொள்வார்கள். அவன் நீண்ட காலம் வரை தன்னை மறைத்து வைத்திருந்தான். மேலும் அவன் மறுக்கப்பட்டான். ஆயினும் அவன் மௌனமாகவே இருந்தான். ஆனால், இப்போது அவன் தன்னை மறைத்துக் கொள்ள மாட்டான். அவர்களின் மூதாதையர் கண்டிராத அவனது வல்லமையின் முன்மாதிரிகளை நிச்சயம் உலகம் கண்டு கொள்ளும். இவ்வாறு நிகழ வேண்டிய காரணம் என்னவெனில், உலகம் மிகவும் சீர்கேடு அடைந்து விட்டது. மேலும், வானங்களையும் பூமியையும் படைத்த இறைவன் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லாது போய் விட்டது. வெறும் உதட்டளவில் அவனைப் பற்றி நினைவு கூரல் காணப்பட்டாலும் உள்ளம் அவனை விட்டும் விலகி விட்டது. இதனாலேயே இப்போது நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் உண்டாக்கப் போகிறேன் என்று இறைவன் கூறியுள்ளான். இதன் கருத்து என்னவெனில், பூமியானது மரணித்துப் போய் விட்டது. அதாவது பூமியில் வாழும் மக்களின் இதயங்கள் கடினமாகி விட்டன. அவர்கள் இறந்தவர்களைப் போல் ஆகி விட்டனர். ஏனெனில் இறைவனின் முகம் அவர்களை விட்டும் மறைந்து போய் விட்டது. சென்ற கால வானத்தின் அடையாளங்களெல்லாம் வெறும் கதைகளாக ஆகி விட்டன. இதனால் புதிய பூமியையும் புதிய வானத்தையும் இறைவன் படைக்க எண்ணம் கொண்டான். அந்த புதிய வானம் புதிய பூமி என்றால் என்ன? புதிய பூமி என்பது இறைவன் தன் கரங்களால் உண்டு பண்ணிக் கொண்டிருக்கும் தூய்மையான இதயங்கள் ஆகும். அவை, இறைவனால் தோன்றியவையாகும். அவற்றால் இறைவன் தோற்றம் அளிப்பான். மேலும், புதிய வானம் என்றால் இறைவனின் ஆணையின்படியே அவனது அடியார்களின் கரங்களால் வெளியாகும் அடையாளங்களாகும்.

(தொடர்ச்சி 7-வது பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

மூன்று விஷயங்கள் என்னவென்றால், அல்லாஹ்வின் வழியில் அழைத்தல், நற்செயல் செய்தல், கட்டுப்படுதலில் முன்மாதிரியைக் காட்டி நான் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் எல்லா கருத்துக்களின் மீதும் ஈமான் கொண்டுள்ளேன். அதன்படி செயல்பட முடிந்த வரை முயற்சி செய்வேன் என்று கூறுதல். இவை எத்தகையவை எனில், அதில் முதல் விஷயம் ஒரு நம்பிக்கையாளரை மார்க்கத்தை தாமும் கற்று, உலகிற்கும் கற்றுத் தருபவராக்கி விடுகிறது. மேலும், அல்லாஹ்வுடைய உரி.மை என்ன என்று உலகிற்கு கற்றுக் கொடுங்கள் என்பதை அவருககு கற்றுத் தருகிறது. அதனை நீங்கள் எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்று உலகிற்கு எடுத்துக் கூறுங்கள். மேலும் உங்களில் ஒருவர் மற்றவர் மீது என்னென்ன உரிமைகளை கொண்டுள்ளார் என்று கூறுங்கள். அதனை நீங்கள் எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்று அவ்வசனம் கூறுகிறது. மற்றவருக்கு எடுத்துச் சொல்வதில் எப்போது கவனம் வரும் எனில் நீங்கள் மற்றவரைப் பற்றி ஒரு வேதனையை உள்ளத்தில் கொள்ளும் போதுதான் ஏற்படும். அவர்களை ஷய்த்தானின் தூண்டுதலில் இருந்து காப்பாற்றுவதற்கு ஒரு துடிப்பும் கவனமும் ஏற்பட வேண்டும்.

அடுத்த சிறப்பு நற்செயல்களை மேற்கொள்ளுதல் அதாவது, அல்லாஹ் மற்றும் அவனது அடியார்களின் உரிமைகளை தருவதன் பக்கம் கவனம் செலுத்துதல் மட்டுமின்றி தாமே ஒரு முன்மாதியாகி தமது முன்னுதாரணத்தை அடுத்தவருக்கு காட்டுதல் ஆகும். அதுவன்றி உங்கள் மார்க்க அறிவும் பயனற்றது. அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் செயலும் கூட அல்லாஹ்வின் பரக்கத்துகள் மற்றும் நல் விளைவுகள் அற்றதாக ஆகி விடும்.

மூன்றாவது சிறப்புத் தன்மையாக ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவர், நான் முற்றிலும் கட்டுப்பட்டவனைச் சார்ந்தவர் என்று அறிவிக்க வேண்டும். அதாவது அல்லாஹ் மற்றும் ரஸூலின் கட்டளைகள் மீது முழுமையான ஈமான் கொள்கிறேன். ஈமான் கொள்வது மட்டுமின்றி அதனை வாழ்வின் அங்கமாகவும் ஆக்குகிறேன். நான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருபவர் ஆவேன் என்று அறிவிக்க வேண்டும். அவ்வாறே கட்டுப்படுதலில் காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுப்படுதல், ஜமாஅத்தின் அமைப்புக்கு கட்டுப்படுதலும் வந்து விடுகிறது.

நற்செயல், நன்னடத்தை, தக்வாவின் உயர்ந்த தகுதி ஆகியவை கட்டுப்படுதலின் தரம் உயர்வதன் மூலமே உயர்கிறது. சிலவேளை வெளிப்படையான நற்செயல் செய்பவர்கள், மார்க்கப் பணியாற்றுபவர்கள் ஆகியோரின் முடிவு நல்லதாக இல்லாதது நமக்கு தெரிய வருகின்றது.

நமது தப்லீக் வெற்றி அடைவதற்கு நமது நன்மைகள் பொருத்தமான நற்செயல் என்று அழைக்கப்படுவதற்கு நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்குப் பிறகு அவர்களின் கிலாஃபத் அமைப்புக்கு முழுமையாகக் கட்டுப்பட வேண்டும். கிலாஃபத்தின் கண்காணிப்பின் கீழ் உள்ள அமைப்புக்கும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். நம்முடைய தனிப்பட்ட மற்றும் ஒட்டுமொத்த முயற்சிகளில் பரக்கத் ஏற்படுவதற்கு ஜமாஅத்தில் ஒவ்வொரு தனி மனிதரும், பொறுப்பாளரும், ஊழியரும், முரப்பிகளும் ஜமாஅத் அமைப்பை புரிய வேண்டும். ஒருவர் மற்றவரின் உரிமைகளை தர வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் உலகில் இஸ்லாத்தின் அழகிய போதனை பரவ வேண்டியதுள்ளது என்பதில் சந்தேகமில்லை. பரவிக் கொண்டும் உள்ளது. அல்லாஹ் அன்னாருக்கு பல இல்ஹாம்களின் மூலம் அவர்களுக்கு அது பற்றிய நற்செய்தியையும் வழங்கியுள்ளான். நாம் பார்க்கிறோம். இப்போது உலகில் M.T.A மூலமாக அல்லாஹ் உலகில் தானே இந்த தூதுச் செய்தியை கொண்டு சேர்க்கின்றான்.

இதுவே அல்லாஹ்வுடைய வேலையாகும் மற்றும் அவனது வாக்குறுதியாகும். இது நிறைவேறியே தீரும் – இன்ஷாஅல்லாஹ். இதில் நமது எந்த மனித முயற்சியின் சிறப்பு எழுதவும் இல்லை. மாறாக அல்லாஹ் கூறுகிறான்: மிகச் சிறந்த முஃமினின் அடையாளம் என்னவென்றால் அவன் அல்லாஹ்வின் பக்கம் அழைக்க வேண்டும். அல்லாஹ் இப்பணியில் நம்மை பங்குதாரராக்க விரும்புகிறான். அவன்தான் இந்த பணியை செய்கிறான். இப்பணியை செய்வதற்காக அவன் முடிவு செய்து விட்டான். நற்கூலியில் நம்மை இணைக்க விரும்புகிறான். இதற்கு ஒவ்வோர் அஹ்மதியும் முன்னுரிமை தர வேண்டும்.

---

ஸ்பெயினிலுள்ள ஜமாஅத் சகோதரர்களுக்கு குறிப்பாக அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் பணியின் பக்கம் கவனம் செலுத்துமாறு ஹுஸூர் அவர்கள் வலியுறுத்தி அறிவுரைகளைக் கூறினார்கள். இது தொடர்பாக முக்கிய வழிகாட்டல்களை ஹுஸூர் அவர்கள் வழங்கினார்கள். தப்லீக் மற்றும் அல்லாஹ்வின் பக்கம் அழைப்பது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **ஸ்பெயினின் பைத்ரோ ஆபாதிலுள்ள பஷாரத் பள்ளிவாயிலில்**
**20 ஏப்ரல் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **20 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ - اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ - اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ -

**وَمَنْ اَحْسَنُ قَوْلًا مِّمَّنْ دَعَآ اِلَى اللّٰهِ وَعَمِلَ صَالِحًا وَّقَالَ اِنَّنِيْ مِنَ الْمُسْلِمِيْنَ**

இந்த வசனத்தின் பொருள்: ஒருவர் அல்லாஹ்வின் பக்கம் அழைத்து நற்செயலும் செய்து நான் முழுமையாக கட்டுப்பட்டவன் என்று கூறுபவரை விட மிகச் சிறந்ததை கூறுபவர் யார்? **(41:34)**

இந்த வசனம், ஒரு முழுமையான உதாரணமாகவும் ஒரு நம்பிக்கை கொண்டவரிடம் இருக்க வேண்டிய எல்லா சிறப்புகளையும் உள்ளடக்கியதாகும். ஓர் உண்மையான முஸ்லிமை தவிர வேறு எவர் இவ்விஷயங்களை செய்பவராக இருக்க முடியும்? அல்லாஹ் இந்த வசனத்தில் மூன்று சிறப்புகளைக் கூறுகின்றான். அவை எவரிடம் உள்ளதோ அவரது வாழ்வில் ஒரு புரட்சி ஏற்பட முடியும். தமது வாழ்வில் மட்டும் மாற்றம் ஏற்படுவதில்லை. மாறாக, மற்றவர்களிடத்திலும் கூட அம்மனிதரால் புரட்சியை ஏற்படுத்த முடியும். மூன்று விஷயங்கள் என்னவென்றால், அல்லாஹ்வின் வழியில் அழைத்தல், நற்செயல் செய்தல், கட்டுப்படுதலில் முன்மாதிரியைக் காட்டி நான் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் எல்லா கருத்துக்களின் மீதும் ஈமான் கொண்டுள்ளேன். அதன்படி செயல்பட முடிந்த வரை முயற்சி செய்வேன் என்று கூறுதல். இவை எத்தகையவை எனில், அதில் முதல் விஷயம் ஒரு நம்பிக்கை –யாளரை மார்க்கத்தை தாமும் கற்று, உலகிற்கும் கற்றுத் தருபவராக்கி விடுகிறது. மேலும், அல்லாஹ்வுடைய உரிமை என்ன என்று உலகிற்கு கற்றுக் கொடுங்கள் என்பதை அவருககு கற்றுத் தருகிறது. அதனை நீங்கள் எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்று உலகிற்கு எடுத்துக் கூறுங்கள். மேலும் உங்களில் ஒருவர் மற்றவர் மீது என்னென்ன உரிமைகளை கொண்டுள்ளார் என்று கூறுங்கள். அதனை நீங்கள் எவ்வாறு

நிறைவேற்ற வேண்டும் என்று அவ்வசனம் கூறுகிறது. மற்றவருக்கு எடுத்துச் சொல்வதில் எப்போது கவனம் வரும் எனில் நீங்கள் மற்றவரைப் பற்றி ஒரு வேதனையை உள்ளத்தில் கொள்ளும் போதுதான் ஏற்படும். அவர்களை ஷய்த்தானின் தூண்டுதலில் இருந்து காப்பாற்றுவதற்கு ஒரு துடிப்பும் கவனமும் ஏற்பட வேண்டும். அவ்வாறு ரஹ்மானின் அடியார்களின் கூட்டத்தை அதிகமாக்க வேண்டும் என்ற துடிப்பு ஏற்படும்போது அது உருவாகும். இந்த சிறப்பு உருவாகி அல்லாஹ்வுக்கு அருகில் கொண்டு வருவதற்கான ஒரு ஆர்வம் உருவாகி விட்டால் குறிப்பாக ஷய்த்தானின் திட்டங்களால் அல்லாஹ்வை விட்டு அகற்றுவதற்கான பல்வேறு மனங்கவரும் பொருட்கள் அதிகமாகும் போது அந்நிலையில் அல்லாஹ்வின் மீது பயம் உள்ளவர் அவனது நெருக்கத்தை தேடுபவர் இந்த முயற்சியை செய்ய முடியும்.

அடுத்த சிறப்பு நற்செயல்களை மேற்கொள்ளுதல் அதாவது, அல்லாஹ் மற்றும் அவனது அடியார்களின் உரிமைகளை தருவதன் பக்கம் கவனம் செலுத்துதல் மட்டுமின்றி தாமே ஒரு முன்மாதியாகி தமது முன்னுதாரணத்தை அடுத்தவருக்கு காட்டுதல் ஆகும். அதுவன்றி உங்கள் மார்க்க அறிவும் பயனற்றது. அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் செயலும் கூட அல்லாஹ்வின் பரக்கத்துகள் மற்றும் நல் விளைவுகள் அற்றதாக ஆகி விடும். இந்த நிலை ஏற்படும்போது அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் எல்லா முயற்சிகளும் வீணாகி விட்டன. அல்லாஹ்வின் திருப்தியும் கிடைக்காது.

பிறகு, மூன்றாவது சிறப்புத் தன்மையாக ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவர், நான் முற்றிலும் கட்டுப்பட்டவனைச் சார்ந்தவர் என்று அறிவிக்க வேண்டும். அதாவது அல்லாஹ் மற்றும் ரஸூலின் கட்டளைகள் மீது முழுமையான ஈமான் கொள்கிறேன். ஈமான் கொள்வது மட்டுமின்றி அதனை வாழ்வின் அங்கமாகவும் ஆக்குகிறேன். நான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருபவர் ஆவேன் என்று அறிவிக்க வேண்டும். அவ்வாறே கட்டுப்படுதலில் காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுப்படுதல், ஜமாஅத்தின் அமைப்புக்கு கட்டுப்படுதலும் வந்து விடுகிறது. நான் பெரிய தப்லீக் செய்கிறேன். என்னிடம் நிறைய அறிவு இருக்கிறது. எனக்கு எந்த அமைப்பும் தேவையில்லை என்பதன்று. இந்த முறை அல்லாஹ்வுக்கு பிடித்தமானதன்று.

இக்காலத்தில் அல்லாஹ் ஒரு ஜமாஅத்தை உருவாக்க நாடியுள்ளான்; உருவாக்கியுள்ளான். அத்துடன் இணைவது அவசியம் ஆகும். அல்லாஹ் கூறி விட்டான். அல்லாஹ்வின் பக்கம் அழைப்பது நல்ல விஷயம்தான். ஆனால் إِنَّنِي مِنَ الْمُسْلِمِينَ – நான் கட்டுப்பட்டவர்களைச் சார்ந்தவன் என்று அறிவிப்பதும் அவசியமாகும். நான் கட்டுப்படுதலின் உயர்ந்த தரத்தை நிலைநாட்டியவாறு கட்டுப்படுதலை அறிவிக்கிறேன். அதுபோன்று நற்செயல், நன்னடத்தை, தக்வாவின் உயர்ந்த தகுதி ஆகியவை கட்டுப்படுதலின் தரம் உயர்வதன் மூலமே உயர்கிறது. சிலவேளை வெளிப்படையான நற்செயல் செய்பவர்கள், மார்க்கப் பணியாற்றுபவர்கள் ஆகியோரின் முடிவு நல்லதாக இல்லாதது நமக்கு தெரிய வருகின்றது.

அல்லாஹ்: கூறுகிறான். ஒரு நம்பிக்கையாளர் அல்லது மிகச் சிறந்த விஷயத்தை பேசுபவர் கூட நல்ல முன்மாதிரி காட்டுபவரின் தகுதியைப் பெறுவதற்கும் விளைவுகளை நல்லதாக தருவதற்கும் அவர்கள் இவ்வாறு அறிவிக்க வேண்டும். அதாவது, நான் கட்டுப்படுபவனைச் சார்ந்தவன் என்று அறிவிக்க வேண்டும். நான் அல்லாஹ்வினால் உருவாக்கப்பட்ட அமைப்பிற்கு முழுமையாக கட்டுப்படுகிறேன் என்று அறிவிக்க வேண்டும். அஹ்மதிகளாகிய நமக்கு முழுமையான கட்டுப்படுதலின் தரம் நிறைவேறுவதற்கு நமது தப்லீக் வெற்றி அடைவதற்கு நமது நன்மைகள் பொருத்தமான நற்செயல் என்று அழைக்கப்படுவதற்கு நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்குப் பிறகு அவர்களின் கிலாஃபத் அமைப்புக்கு முழுமையாகக் கட்டுப்பட வேண்டும். கிலாஃபத்தின் கண்காணிப்பின் கீழ் உள்ள அமைப்புக்கும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். நம்முடைய தனிப்பட்ட மற்றும் ஒட்டுமொத்த முயற்சிகளில் பரக்கத் ஏற்படுவதற்கு ஜமாஅத்தில் ஒவ்வொரு தனி மனிதரும், பொறுப்பாளரும், ஊழியரும், முரப்பிகளும் ஜமாஅத் அமைப்பை புரிய வேண்டும். ஒருவர் மற்றவரின் உரிமைகளை தர வேண்டும். அல்லாஹ் தனது வாக்குறுதி மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்புக்கு ஏற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பியுள்ளான். எந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது அவர்களது பொறுப்பில் உள்ளதோ அது கண்டிப்பாக நிறைவேறும் என்பதில் சந்தேகம் இல்லை. சில அவர்களின் வாழ்நாளிலேயே நிறைவேறின. சில அன்னாரின் வஃபாத்திற்குப் பிறகு நிறைவேற வேண்டியதிருந்தது; நிறைவேறிக் கொண்டிருக்கிறது. அன்னார் மூலமே இஸ்லாத்தின் தூதுச் செய்தி உலகின் மூலை முடுக்குகள் வரை பரவுகிறது. சிறிது சிறிதாக தூய்மையான உள்ளம் கொண்டோர் அஹ்மதிய்யத் மற்றும் இஸ்லாத்தின் மடியில் வந்து கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் தனது நபிமார்களை எந்த நோக்கத்திற்காக அனுப்பினானோ அதனை நிறைவேற்றுகிறான்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்: كَتَبَ اللّٰهُ لَأَغْلِبَنَّ أَنَا وَرُسُلِي – நானும் எனது ரஸூலும்தான் வெற்றி பெறுவோம் ( :22) என்று அல்லாஹ் எழுதி வைத்து விட்டான். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் கூட பலமுறை இந்த இல்ஹாமை இறக்கியுள்ளான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு ஓரிடத்தில் கூறினார்கள்: அல்லாஹ் உடைய நடைமுறை என்னவென்றால், அவன் மனிதனை இவ்வுலகில் படைத்ததில் இருந்து இந்த நடைமுறையை நடைமுறைபடுத்தி வந்திருக்கின்றான். அவன் தனது நபிமார்கள் மற்றும் ரஸூல்மார்களுக்கு உதவி செய்து வருகிறான். அவர்களுக்கு வெற்றி தருகிறான். அவன் கூறுகிறான்: كَتَبَ اللّٰهُ لَأَغْلِبَنَّ أَنَا وَرُسُلِي அவை வெற்றி என்பதன் பொருள் ரஸூல்மார்கள் நபிமார்களின் விருப்பம் மற்றும் இறைவனின் சான்றுகள் முழுமை அடைய வேண்டும். அதனை எவராலும் எதிர்த்து நிற்க முடியாது என்பதாகும். அதேபோன்று இறைவனும் வலுவான அடையாளங்கள் மூலம் அவனது உண்மையை வெளிப்படுத்துகின்றான். எந்த நம்பிக்கையை அவன் உலகில் பரவச் செய்ய விரும்புகிறானோ அதன் விதைத் தூவல் அவரது கரங்கள் மூலமே நடக்கின்றது.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: அல்லாஹ் ஆரம்பம் முதலே எழுதி விட்டான். இதனை அவன் தனது சட்டம் மற்றும் நடைமுறையாக்கி வைத்துள்ளான். அதாவது அவனும் அவனது ரஸூல்மார்களும் தான் வெற்றி பெறுவர்.

பிறகு மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தம்மைப் பற்றி கூறுகிறார்கள்: நான், அவனது ரஸூல், அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் ஆவேன். எந்த புதிய ஷரீஅத்தும் புதிய பெயரும் இன்றி, அதே நபி கரீம் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் பெயரைக் கொண்டு அவர்களிடம் மாய்ந்து அவர்களை வெளிப்படுத்துபவனாக வந்துள்ளேன். எனவே நான் கூறுகிறேன். ஆதமின் காலத்திலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரை இந்த வசனம் உண்மையாகி வந்தது போன்று என்னைப் பற்றியும் உண்மையாகி வெளிப்படும். எந்த செடியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் உலகின் மூலை முடுக்குகள் வரை நட்ட அவன் விரும்புகிறானோ அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய ஷரீஅத் என்னும் செடியாகும். அதன் பரவுதல், முழுமைப்படுத்துதல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) காலத்தில் நடக்கும் என்று விதிக்கப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதுபோன்று எந்த நம்பிக்கையை அல்லாஹ் உலகில் பரப்ப நாடினானோ அதன் விதையை தமது ரஸூல்மார்களின் மூலம் தூவுகிறான். இந்த இஸ்லாத்தின் பரவுதல் முழுமைப்படுத்துதல் என்ற விதையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் தூவியுள்ளான். இன்னும் சொல்வதாயின் அந்த விதைகளின் நல்ல பசுமையான விளைச்சலையும் கூட சில இடங்களில் அல்லாஹ் அவர்களின் காலத்தில் நடக்கச் செய்து காட்டினான். பிறகு அவர்களால் தூவப்பட்ட விதை அவர்களின் கிலாஃபத்தின் காலத்தில் உலகில் பரவுகிறது. அன்னாரின் கையால் தூவிய அந்த விதையின் செடிகள் உலகின் மற்ற நாடுகளிலும் முளைக்கின்றன; பரவுகின்றன. செடிகளின் ஒரு நர்ஸரியை தயார் செய்தார்கள். விவசாயிகளுக்கு நன்றாக தெரியும். அவர்கள் செடிகளின் நர்ஸரி தயார் செய்து விட்டால் பிறகு அதனை உலகில் எங்கும் எடுத்துச் சென்று நட முடியும். அதுபோன்று அன்னார் திருக்குர்ஆனின் அறிவு மற்றும் ஞானத்தின் விளக்கவுரையின் நர்ஸரி மற்றும் இஸ்லாத்தின் தூதை அன்னார் திருக்குர்ஆனின் ஒளியில் கூறினார்கள்.

உலகின் மூலை முடுக்குகள் எங்கும் அது பரப்பப்படுகிறது. உலகம் இஸ்லாத்தின் அழகிய போதனையை அறிந்து கொண்டிருக்கிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் உலகில் இஸ்லாத்தின் அழகிய போதனை பரவ வேண்டியதுள்ளது என்பதில் சந்தேகமில்லை. பரவிக் கொண்டும் உள்ளது. அல்லாஹ் அன்னாருக்கு பல இல்ஹாம்களின் மூலம் அவர்களுக்கு அது பற்றிய நற்செய்தியையும் வழங்கியுள்ளான். அதில் ஒன்று كَتَبَ اللّٰهُ لَاَغْلِبَنَّ அதனை கூறி விட்டேன். அதுபோன்று பல இல்ஹாம்கள் உள்ளன. அதில் ஒரு சிலவற்றை கூறுகின்றேன். يَنْصُرُكُمُ اللّٰهُ فِيْ دِيْنِهٖ அல்லாஹ் தனது மார்க்கத்திற்காக உனக்கு உதவி செய்வான். அதாவது எந்த பணியை நீர் செய்கிறீரோ அது அல்லாஹ்வுடைய மார்க்கமும் பணியும் ஆகும். இல்ஹாம் يَنْصُرُكَ اللّٰهُ مِنْ عِنْدِهٖ இறைவன் தன் புறமிருந்து உதவி செய்வான். பிறகு ஓர் இல்ஹாம் மிகவும் பிரபல்யமானதும் ஆகும். எல்லா இடத்திலும் கூறப்படுகிறது. அதற்கு முன்பு நான் இன்னோர் இல்ஹாம் கூறுகிறேன். நான் உன்னை பூமியில் எல்லை வரை கண்ணியத்துடன் பிரபலப்படுத்துவேன். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) உடைய கண்ணிம் நிலைபெறும். அல்லாஹ்வின் தரப்பில் இருந்து நிலைபெறும். பிறகு நான் கூற விரும்பிய இல்ஹாம் நான் உனது பிரச்சாரத்தை உலகின் எல்லை வரை எட்ட வைப்பேன். இதனை எல்லாரும் அறிவர் என்று கூறுகின்றான். ஆகவே அன்னாரின் தூதுச் செய்தி உலகில் பரவும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பர் என்றும், துணிவுமிக்க வீரர் என்றும் உலகம் அறியும். அறிந்து கொண்டும் இருக்கிறது.

நாம் பார்க்கிறோம். இப்போது உலகில் M.T.A மூலமாக அல்லாஹ் உலகில் தானே இந்த தூதுச் செய்தியை கொண்டு சேர்க்கின்றான். நான் முன்னரும் பலமுறை கூறி விட்டேன். நமது உலகியல் வசதிகள் ஒருபோதும் இதற்கு போதுமானதில்லை. குறைந்தபட்சம் நாம் இப்போது டி.வி சேனல் நடத்துகிறோம். அதுவும் 24 மணி நேரமும் நடத்துகிறோம். உலகின் பல்வேறு பகுதிகளில் இந்த நிகழ்ச்சிகள் சென்று சேர்ந்துள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் என்னுடைய குத்பாக்களின் மொழியாக்கங்கள் சென்று சேர்கின்றன. ஆறு, ஏழு மொழிகளில் உடனுக்குடன் மொழிபெயர்ப்பு நடக்கிறது. இவை எல்லாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் அல்லாஹ் செய்த வாக்குறுதியின் விளைவாகும். பிறகு எனது குத்பாக்கள் மற்றும் நிகழ்ச்சிகள் மூலமாக பல்வேறு M.T.A நிகழ்ச்சிகள் மூலமாக நல்லியல்வு கொண்ட மக்கள் அஹ்மதிய்யத்தில் இணைகின்றனர். எனக்கும் பலர் எழுதுகிறார்கள். M.T.A -வில் தங்கள் குத்பாக்கள் மற்றும் பிற நிகழ்ச்சிகள் எங்களிடம் இன்னின்ன தாக்கங்களை ஏற்படுத்தின. நாங்கள் அஹ்மதிய்யத்தில் ஆர்வம் கொண்டோம். அல்லாஹ் எங்களுக்கு அஹ்மதிய்யத்தை ஒப்புக்கொள்ள வாய்ப்பு தந்தான். இரண்டு மூன்று நாட்களுக்கு முன் முரப்பிகளுடன் சில கலந்துரையாடல் நிகழ்ச்சி வந்தது. அதில் ஒருவர் கூறினார். எனக்கு அஹ்மதிய்யத் அறிமுகம் ஆனது. அதனால் நான் பைஅத் செய்யும் அளவுக்கு ஆர்வம் ஏற்பட்டது.

இதுவே அல்லாஹ்வுடைய வேலையாகும் மற்றும் அவனது வாக்குறுதியாகும். இது நிறைவேறியே தீரும் – இன்ஷாஅல்லாஹ். இதில் நமது எந்த மனித முயற்சியின் சிறப்பு எழுதவும் இல்லை. மாறாக அல்லாஹ் கூறுகிறான்: மிகச் சிறந்த முஃமினின் அடையாளம் என்னவென்றால் அவன் அல்லாஹ்வின் பக்கம் அழைக்க வேண்டும். அல்லாஹ் இப்பணியில் நம்மை பங்குதாரராக்க விரும்புகிறான். அவன்தான் இந்த பணியை செய்கிறான். இப்பணியை செய்வதற்காக அவன் முடிவு செய்து விட்டான். நற்கூலியில் நம்மை இணைக்க விரும்புகிறான். இதற்கு ஒவ்வோர் அஹ்மதியும் முன்னுரிமை தர வேண்டும். எந்த பணியை அல்லாஹ் தன் பொறுப்பில் எடுத்துள்ளானோ அதில் பங்கெடுத்து நற்கூலியில் பங்கெடுக்க வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவராக ஆக வேண்டும். நீங்கள் இங்கு ஸ்பெயினில் இருக்கிறீர்கள். நேரத்தை மிச்சப்படுத்தி மாதத்தில் ஓரிரு நாட்கள் தப்லீகிற்காக செலவிட வேண்டும். மக்களின் மனங்களை அறிந்து அதற்கேற்ப செயல்பட வேண்டும். ஒரு ஸ்பேனிய புதிய அஹ்மதி ஓரிரு நாட்கள் முன்பு தான் என்னை சந்திருக்க வந்தார். அவர் கூறினார்: இங்கு இஸ்லாத்தை எந்த முறையில் எடுத்து வைக்க வேண்டுமோ அவ்வாறு வைக்கப்படவில்லை. ஜமாஅத் அவ்வாறு எடுத்து வைக்கவில்லை. மாறாக அவரின் கருத்தின்படி ஒரு சில முரப்பிகள் தவிர பிற முரப்பிகளும் கூட இங்குள்ளவரின் மனநிலையை அறிந்து தப்லிக் செய்யவில்லை அல்லது செய்யத் தெரியவில்லை.

அவர் கூறினார்: நாங்கள் நிச்சயமாக ஐரோப்பாவைச் சார்ந்தவர்கள்தான். ஆனால் எங்கள் மன நிலை ஐரோப்பாவின் பிற இடங்களை விட்டு வேறுபட்டதாகும். ஐரோப்பிய மக்களைப் போன்று நிலைமைக்கு கேற்ப இம்மக்களும் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் மீது பயம் கொண்டவர்களாக இருக்கின்றனர். ஐரோப்பாவின் அந்த தாக்கம் இங்கு இருந்தாலும் கூட அத்துடன் முஸ்லிம்கள் நீண்ட காலம் ஸ்பெயினில் வாழ்ந்த காரணத்தால் எங்களுக்குள் உணரவே முடியாத முறையில் முஸ்லிம்களுடன் தொடர்புக்கான ஈர்ப்பும் உள்ளது. அதனை தூண்ட வேண்டிய தேவை உள்ளது. குறிப்பாக உந்துலுஸ் போன்ற மாநிலங்களில் தேவை உள்ளது. நமது தப்லீக் செயலர் மற்றும் தலைமையகம் மற்றும் பிற தப்லீக் செயலரும் சரி மற்றும் பிற பொறுப்பாளர்களும் சரி, நிலைமைகளுக்கு ஏற்ப அனுசரித்து நடக்க வேண்டும். ஒவ்வோர் அஹ்மதியும் குத்தாம் அன்ஸார் லஜ்னா ஆகியோர் தப்லிகிற்காக நேரத்தை தர வேண்டும் இங்கு முஸ்லிம்களை 700–800 வருடங்களுக்கு முன் வாளின் ஆதிக்கத்தால் கிறித்தவர்களாக்கினார்கள். ஆனால் நாம் அன்பு, நேசம் இஸ்லாத்தின் அழகிய போதனை மூலம் உள்ளங்களை வென்றெடுக்க வேண்டும். ஜமாஅத்தின் அறிமுகம் இஸ்லாத்தின் அறிமுகம் இங்கு பரந்த அளவில் நடந்து கொண்டு இருக்கிறது. டி.வி சேனல், பத்திரிகைகள் ஜமாஅத் பற்றிய செய்திகளை வெளியிடுகின்றன. அதன் மூலம் தப்லீகும் நடக்கிறது. குர்தபாவின் ஒரு பத்திரிகை நிருபர் அல்லது உரிமையாளர் என்னை சந்திக்க வந்தார்கள். பத்திரிகைகளைக் காட்டினார்கள். எவ்வாறு ஜமாஅத் பற்றி நாங்கள் முழு பக்கத்திலும் எழுதியிருக்கிறோம் என்று காட்டினார்கள். இலண்டனில் நமது அமைதி கருத்தரங்கு நடந்தபோது இங்குள்ள பத்திரிகையாளர்களும், டிவி சேனல்காரர்களும் வந்திருந்தார்கள். டி.வி சேனல் பிரதிநிதிகள் என்னை நேர்காணல் செய்தனர். பிறகு தமது டிவி சேனலில் ஜமாஅத் பற்றி இந்த ஜமாஅத் இஸ்லாத்தின் அமைதியின் தூதை எடுத்து வைக்கிறது என்று கூறி அது பற்றி ஒரு நிகழ்ச்சியைக் காட்டியது. எனது நேர்காணலின் சிறு பகுதியையும் காட்டியது. ஸ்பெயினின் நிலை 35–36 ஆண்டுகளுக்கு முந்தைய நிலை அல்ல. இன்று தூதை சேர்ப்பதில் குறைவு இருக்கும் எனில் அது நம் தரப்பில்தான். இங்கு பல்வேறு நகரங்களில் இருந்து மொராக்கோ மற்றும் பிற அரபு நாடுகளில் இருந்து மக்கள் வந்து தங்கியுள்ளனர். அவர்களின் பகுதியில் அரபு பேசக் கூடியவர்களை பயன்படுத்தி தப்லீக் செய்ய வேண்டும். அரபி லிட்ரேச்சர்களை விநியோகிக்க வேண்டும்.

ஸ்பெயினில் மொழியில் படைப்புகளைப் பற்றி கூறுவதாயின் கடந்த சில வருடங்களாக யூ.கே மற்றும் ஜெர்மனியில் இருந்து ஷாஹிது பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்களை செயற்களத்திற்கு வரக்கூடியவர்களை செயற்களத்திற்கு அனுப்பும் முன் அவர்களை நான் இங்கே அனுப்புகிறேன். ஒவ்வொரு நகரிலும் இந்த லிட்சேச்சர்களை அவர்கள் விநியோகம் செய்தனர். எனது கருத்தின் படி 3 மில்லியனை விட அதிகமாக விநியோகம் செய்யப்பட்டு விட்டது. புதிய முரப்பிகள் மற்றும் இங்கு வந்தவர்களின் கருத்தும் இவ்வாறுதான் உள்ளது. ஸ்பெயின் மக்கள் மிகச் சிறந்த முறையில் நமது லிட்ரேச்சர்களை வாங்குகிறார்கள். பொதுவாக மிகவும் கண்ணியத்துடன் நம்மை சந்திக்கிறார்கள். படிக்கவும் செய்கிறார்கள். மிகக் குறைந்த மக்களே தூர எறிபவர்களாக உள்ளனர். பெரும்பாலும் வாங்கி படித்து விட்டு சட்டைப் பையில் வைத்துக் கொள்பவர்களாகவே இருக்கின்றனர். அதுபோன்று இது தவிர நமது ஒரு ஸ்பேனிஸ் பெண் அஹ்மதியானவர் இலண்டனில் வசிக்கிறார். நமது ஒரு புதிதாக பைஅத் செய்பவர்களுக்கான செயலரின் மனைவி ஆவார். அவரது பெற்றோர் இங்குதான் இருக்கின்றனர். அவர்கள் இங்கு வந்தால் பல்வேறு பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் சென்று தப்லீக் செய்கிறார். இவ்வாறு இவர் இலண்டனிலிருந்து வந்து இங்கு தப்லீக் வாய்ப்பை தேடுகின்றார். எவ்வாறு இஸ்லாத்தை அறிமுகப்படுத்துவது? எவ்வாறு ஜமாஅத்தை தெரிய வைப்பது என்று தேடுகிறார். இங்கு வசிக்கக் கூடியவர்கள் முரப்பிகள் ஏன் அத்தகைய சந்தர்ப்பத்தை உருவாக்க முடியாது? ஆகவே இங்கு வசிக்கக் கூடிய அஹ்மதிகள், பொறுப்பாளர்கள், முரப்பிமார்கள் இது சம்பந்தமாக ஒரு திடமான வலுவான திட்டம் தயாரிக்க வேண்டும்.

புதிய ஸ்பேனிய அஹ்மதி பற்றி கூறினேன். அவரிடமும் நான் இதனைத்தான் கூறினேன்.

உங்கள் கருத்தின்படி தப்லீக் செய்ய சிறந்த வழிமுறைகளை எனக்கு எழுதி அனுப்புங்கள். அந்த ஆலோசனைகளை நான் உங்களுக்கு அனுப்புவேன். செயல்படுத்தத்தக்கதை உங்களுக்கு புரியக்கூடியதை நீங்களும் செய்ய வேண்டும். அவ்விஷயத்தில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு நல்குவது முக்கியமாகும். சொந்த விஷயங்களில் இருந்து விலகி ஜமாஅத்தின் பலனுக்கு முன்னுரிமை தர வேண்டிய தேவை உள்ளது. நாம் அஹ்மதியாகி தமது பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என்ற பொறுப்பை உணர வேண்டியது அவசியமாகும். ஒரு குறிப்பான ஆர்வம், விருப்பம் தேவையாகும். ஒரு வருடத்திற்குப் பிறகு ஒரு மாதத்திற்காக மட்டும் பிரசுரங்களை விநோயகம் செய்வதால் நமது நோக்கம் நிறைவேறாது. நாம் அவர்களை இங்கு அனுப்பத் தொடங்கிய காரணம் ஒன்று உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். ஏனெனில், இங்கு ஜமாஅத் மக்களின் எண்ணிக்கை குறைவு ஆகும். இரண்டாவது உங்கள் உள்ளங்களில் தப்லீகிற்கான ஆர்வம் பிறக்க வேண்டும் என்பதற்காக. குறைந்தபட்சம் தப்லீக் செய்வதற்கான தடை, மொழி சரியாக வராததனால் உருவான தடை அகன்று எல்லாரும் தப்லீகில் இணைய வேண்டும் என்பதற்காகவே இதுசெய்யப்பட்டிருக்கின்றது. புதிய முரப்பி–களுக்கு மொழி தெரியாது. இருந்தும் எல்லா இடங்களுக்கும் சென்று தமது நோக்கத்தை நிறைவேற்றுகின்றனர். ஓர் உணர்வு உருவாக வேண்டும். அல்லாஹ் தஃவத்தே இலல்லாஹ்வின் பணியை (அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் பணியை) ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவரிடம் ஒப்படைத்துள்ளான். அதனை நாம் நிறைவேற்ற வேண்டும். ஒரு துடிப்பு மற்றும் உணர்வுடன் அதில் பங்கெடுக்க வேண்டும். இப்பணியில் எல்லாரையும் விட முதலில் பங்கெடுக்க வேண்டும். இப்பணியில் எல்லாரையும் விட முதலில் முரப்பிகளின் கடமை உள்ளது. அவர்கள் தப்லீகிற்கு பல்வேறு வழிகளைத் தேட வேண்டும். ஒவ்வொருவரிடமும் கூற வேண்டும். ஜமாஅத்தின் தனி நபரை அழைத்து செல்லுங்கள். தப்லீக் செயலர்கள் தேசிய செயலர்கள் தப்லீக் பற்றி தமது உணர்வுகளை வெளிப்படுத்து–கின்றனர். அவர்கள் வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் அவர்களுக்கு பட்ஜெட் பற்றிய கவலை இருப்பதாக தெரிகிறது. மேலும், ஜமாஅத் மக்களின் ஒத்துழைப்பு வேண்டுமே என்ற கவலை இருப்பதாகவும் தெரிகிறது. ஆகவே, ஜமாஅத்தின் அமீருக்கு பொறுப்புள்ளது. பட்ஜெட் பற்றி பிரச்சனை இருக்கும் எனில் தீர்த்து வையுங்கள். எனக்கு எழுதுங்கள். முன்னிருந்தே நிறைய செலவுகளை தலைமையகம் ஏற்று வருகிறது. தப்லீக் செயலர், முரப்பிகள் மற்றும் ஜமாஅத் மக்கள் அனைவரும் ஜமாஅத்தின் அமீருக்கு முழுமையான ஒத்துழைப்பு தர வேண்டும். இதன் மூலம்தான் நாம் இஸ்லாத்தின் மறைந்துபோன மகத்துவத்தை இங்கு மீண்டும் நிலை நாட்ட முடியும். இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தோற்றத்தின் நோக்கம் ஆகும். கிலாஃபத்தினைப் பற்றி படம் பிடித்து காட்டியவாறு இஸ்லாத்தின் தற்போதைய நிலைமைகளை கருத்தில் கொண்டு உள்ளத்து வேதனையை குறிப்பிட்டவாறு இஸ்லாத்தின் மகத்துவத்தையும் பெருமையையும் மீண்டும் நிலைநாட்ட இறைவன் விரும்புகிறான் மற்றும் இஸ்லாத்தின் பெருமை மீண்டும் நிலை நாட்ட வேண்டும் என்றும் இஸ்லாத்தின் எதிரிகளை அழிக்கவும் அல்லாஹ் நாடுகிறான் என்றும் குறிப்பிட்டவாறு அதற்காகவே அன்னாரை அல்லாஹ் அனுப்பியுள்ளான் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள். அல்லாஹ் இயக்கத்தின் மகத்துவத்தை காட்டுகிறான்.

ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இக்காலம் மிகவும் வாழ்த்துக்குரிய காலமாகும். இக்காலத்தில் மிகவும் இருள் நிறைந்த காலத்தில் தனது அருளால் மட்டுமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மகத்துவத்தை நிலைநாட்டு–வதற்காக இறைவன் வாழ்த்துக்குரிய விருப்பம் கொண்டான். மறைவில் இருந்து இஸ்லாத்திற்கு உதவிக்கான ஏற்பாடு செய்தான். ஓர் இயக்கத்தை உருவாக்கினான். இஸ்லாத்திற்காக வேதனை உள்ளவர்களிடம் நான் கூற விரும்புகிறேன். அதன் கண்ணியம் அவர்களின் உள்ளங்களில் இருந்தால் அவர்கள் கூறட்டும். இதனை விட கொடுமையான காலம் இஸ்லாம் மீது வந்துள்ளதா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த அளவுக்கு இழிவுக்கு அவமரியாதைக்கும் உள்ளாக்கப்படும் காலம் வந்ததா? இந்த அளவுக்கு குர்ஆன் மீது இழிவு ஏற்படுத்தப்பட்டதா? முஸ்லிம்களின் நிலமைகளின் மீது மிகவும் ஆதங்கமும் உள்ளத்தில் வேதனையும் ஏற்படுகிறது. சில நேரங்களில் இந்த வேதனையால் நிலைகுலைந்து போகிறேன். இதில் வேறு என்னதான் மிச்சம் உள்ளது. இந்த கண்ணியக்குறைவைப் புரிந்து கொள்ளுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய எந்த கண்ணியமும் அல்லாஹ்வுக்கு விருப்பம் இல்லாமல் போய்விட்டதா என்ன? இந்த அளவுக்கு இழிவுபடுத்திய பிறகும் அவன் ஒரு வானத்து இயக்கத்தை நிறுவாமல் இருப்பானா? இந்த எதிரிகளின் வாயை அடைத்து அன்னாரின் கண்ணியத்தை உலகில் பரவுவதற்கு ஒரு வானத்து இயக்கத்தை அனுப்பி விட்டானா? அவனும் அவனது மலக்குகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது அனுப்புகிறார்கள். இந்த இழிவின் காலத்தில் அந்த ஸலாத்திற்கு எவ்வளவு தேவை உள்ளது? அன்னாரின் வெளிப்படுதலை அல்லாஹ் இந்த இயக்கத்தின் மூலம் ஏற்பாடு செய்தான். அஹ்மதிய்யா ஜமாஅத்தை உருவாக்கியதன் மூலம் இதனை செய்தான்.

அன்னார் கூறுகிறார்கள்: அவ்விறைவன் என்னை அனுப்பியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மறைந்து விட்ட மகத்துவத்தை மீண்டும் நிலைநாட்டி திருக்குர்ஆனின் உண்மையை மீண்டும் உலகிற்கு காட்டுவதற்காக அனுப்பினான். இந்த அனைத்து பணிகளும் நடக்கின்றன. எவரது கண்கள் கட்டப்பட்டுள்ளதோ அவர்கள் பார்க்க முடியாது. இந்த இயக்கம் சூரியன் போன்று ஒளி தரத் தொடங்கி விட்டது. அதன் அத்தாட்சிகள் மற்றும் அடையாளங்களுக்கு எந்த அளவுக்கு மக்கள் சாட்சியாக உள்ளனர் எனில் அதனை ஒன்று திரட்டினால் அது எந்த அளவுக்கு இருக்கும் எனில் உலகில் எந்த மன்னருக்கும் அவ்வளவு பெரிய இராணுவம் இருக்க முடியாது. எந்த அளவுக்கு இந்த இயக்கத்தின் உண்மைக்கு எத்தனை விஷயங்கள் உள்ளன என்று கூறுவது கூட எளிய பணியல்ல. ஏனெனில் இஸ்லாத்திற்கு கடும் இழிவு ஏற்படுத்தப்பட்டது. எனவே இந்த இழிவுக்காகவே அல்லாஹ் இந்த இயக்கத்தின் மகத்துவத்தைக் காட்டினான். இந்த மகத்துவத்தை அல்லாஹ் காட்டுகின்றான் என்பதற்கு நாம் சாட்சியாக உள்ளோம். இங்கும் கூட பத்திரிகை மற்றும் மக்களின் கவனம் திரும்பி உள்ளது. உலகில் சில நாடுகளில் வெளிப்படையாகவே இது வெளிப்படவும் செய்கிறது. இவை அனைத்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கூற்றை உண்மைபடுத்தக் கூடியவையாகும். என்ன குறைவாக உள்ளதோ நாம் கூறியது போன்று அதனை அல்லாஹ்வே நிறைவு செய்து விடுகின்றான். அதன் கூலியில் நம்மை பங்கு பெற வைக்க விரும்புகிறான். எனவே அதில் பங்கு பெறுங்கள். முழுமையாக பங்கு பெறுங்கள். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் உங்கள் வயது அதிகமாக வேண்டும் என்றால் தப்லீகில் ஈடுபடுங்கள் என்று கூறியவாறு எடுத்து வைத்தார்கள்.

அன்னார் கூறுகிறார்கள்: எல்லா மனிதர்களும் அவர்கள் வந்த நோக்கங்களை அறிவதில்லை. இவரது பணியெல்லாம் கால்நடைகளைப்போல் இவ்வளவுதான். இவ்வளவு சாப்பிட வேண்டும். குடிக்க வேண்டும். இவ்வளவு மாமிசம் சாப்பிட வேண்டும். இன்ன உடை உடுத்த வேண்டும். இது தவிர வேறு எந்த கவலையும் இருப்பதில்லை. அந்த மனிதர்கள் பிடிக்கப்படும்போது ஒரேடியாக முடிவு வந்து விடும்.

அவர்கள் கூறுகிறார்கள்: எவர்கள் மார்க்கப் பணியில் மூழ்கி இருப்பார்களோ அவர்களின் பணியை முடிக்கும் வரை அவர்களுடன் மென்மை காட்டப்படுகிறது.

அன்னார் கூறுகிறார்கள்: மனிதன் தனது வாழ்நாள் அதிகமாக வேண்டும் என்று விரும்புகிறான் என்றால் என்ன செய்ய வேண்டும்? நீண்ட வயது வேண்டும்? இது எப்படி நடக்கும்? மார்க்கத்திற்காக தன்னை அவர் அர்ப்பணித்தால் நடக்கும். ஒருவர் அல்லாஹ்வை ஏமாற்ற முடியாது. அல்லாஹ்வை ஏமாற்ற நினைப்பவர் தமது நஃப்ஸை ஏமாற்றுகிறார். அதில் அவர் அழிந்து போவார்.

அவர்கள் கூறினார்கள்: வயதை அதிகரிக்க இதனை விட வேறு மருந்து இல்லை. மனிதன் களங்கமற்ற நன்றியுணர்வுடன் இஸ்லாத்தின் கலிமாவை உயர்த்த முயற்சி செய்ய வேண்டும். மார்க்கப் பணியில் மூழ்க வேண்டும். தற்போது இந்த மருந்து மிகவும் பயன் தரும் மருந்தாகும். தற்போது மார்க்கத்திற்கு அத்தகைய களங்கமற்ற ஊழியர் தேவையாகும். இது இல்லையெனில் வயதுக்கு எந்த உத்திரவாதமும் இல்லை. அப்படியே போய் விடும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தப்லீகின் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: அது நம்மைப் பொருத்தவரை பொன்னெழுத்துக்களால் ஆன போதனையாகும். ஒருமுறை அன்னார் ஹஸ்ரத் அலியை விளித்துக் கூறினார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! உன் மூலமாக ஒருவருக்கு நேர்வழி கிடைப்பது உனக்கு மிக உயர்வான சிவப்பு ஒட்டகங்கள் கிடைப்பதை விட சிறந்தது ஆகும். சிவப்பு நிற ஒட்டகம் அக்காலத்தில் மிகவும் விலைமதிப்புள்ளதாகக் கருதப்பட்டது. சிவப்பு நிற ஒட்டகம் வைத்துள்ள மனிதர் பெரும் செல்வந்தராகக் கருதப்பட்டார்.

அன்னார் கூறுகிறார்கள்: உலகியல் பொருள், சுகங்கள் அதற்கு முன் எந்த மரியாதைக்கும் உரியவை அல்ல. நீங்கள் தப்லீக் செய்யுங்கள். பிறரது நேர்வழிக்குக் காரணமாக இருங்கள். நீங்கள் நிச்சயமாக உலகை சம்பாதியுங்கள். ஆனால் சிறிது நேரத்தை தப்லீகிற்காகவும் பயன்படுத்துங்கள். நான் மாதத்தில் ஒன்றிரண்டு நாள் என்று கூறினேன். அதை விட அதிகமாகவே கொடுக்க வேண்டும். அதனால் உலகமும் கிடைக்கும். அல்லாஹ்வும் திருப்தி கொள்வான். நான் ஆரம்பத்தில் கூறியது போன்று தப்லீக் செய்வதனால் நமது மார்க்க அறிவும் அதிகமாகும்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு நல்ல பணிக்கு நேர்வழிக்காக அழைத்தால் அதை செய்தவருக்கு கிடைக்கும் அதே கூலி இவருக்கும் கிடைக்கும். அவரது கூலியில் எதுவும் குறைக்கப்படாது. இதுதான் ஆரம்பத்தில் ஓதிய வசனத்தின் விளக்கமாகும். அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவரை விட சிறந்தவர் யார்? செய்பவருக்கு அல்லது நேர்வழியைப் பெறுபவருக்கு கிடைக்கும் அதே கூலி அதனை கூறுபவருக்கும் கிடைக்கிறது. அல்லாஹ்வின் வழியில் அழைப்பவருக்கு உலகியல் பெயரும் கிடைத்தது. வாழ்நாளிலும் பரக்கத் ஏற்பட்டது. நன்மைக்கு கூலியும் கிடைத்தது. அல்லாஹ்வின் வெகுமதிகளுக்கு வாரிசாவதற்கு நமக்கு தேவை நாம் தப்லீக் செய்வது அதாவது உலகின் நேர்வழிக்காக நேரத்தை தருவது அவசியமாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு இஸ்லாத்திற்கு செய்யும் அரிய தொண்டின் பக்கம் கவனமூட்டியவாறு ஓரிடத்தில் கூறினார்கள்: இப்போது நேரம் குறைவாக உள்ளது. நான் மீண்டும் மீண்டும் போதிக்கிறேன். எந்த ஒரு இளைஞரும் என் வயது 18–19 தான் ஆகிறது என்றும் இன்னும் நிறைய காலம் இருக்கிறது என்றும் எண்ண வேண்டாம். மேலும் ஆரோக்கியமுள்ளவர் தனது ஆரோக்கியத்தை எண்ணி பெருமை கொள்ள வேண்டாம். அதே போன்று ஒருவர் நல்ல நிலையில் இருக்கிறார். அவர் தனது வசதி வாய்ப்புகளை நினைத்து பெருமை கொள்ள வேண்டாம். இது கடைசி காலமாகும். இறைவன் உண்மையாளரையும் பொய்யரையும் பிரித்தறிய நினைக்கிறான். இப்போது உண்மை மற்றும் பற்றை வெளிப்படுத்தும் நேரம் ஆகும். இப்போது இறுதி வாய்ப்பு தரப்பட்டுள்ளது. இந்த நேரம் பிறகு கிடைக்காது. இது எந்த நேரம் எனில் எல்லா நபிமார்களின் முன்னறிவிப்புகளும் இங்கு வந்து முடிகிறது. எனவே மனித குலத்திற்கு உள்ளம் மற்றும் பற்று காட்டுவதற்கு இறுதி நேரமாகும். பிறகு இதற்கு வேறு எந்தக் காலமும் தரப்படப் போவதில்லை. இந்த நேரத்தை வீணாக்குபவர் பெரும் பேரிழந்தவர் ஆவார்.

அவர்கள் கூறுகிறார்கள்: வெறும் நாவளவில் பைஅத் வார்த்தைகளைக் கூறுவது ஒன்றும் இல்லை. எனவே முயற்சி செய்யுங்கள். இறைவனிடம் துஆ கேளுங்கள். அவன் உங்களை உண்மையாளனாக்க வேண்டும் என்று கேளுங்கள். இதில் நீங்கள் சோம்பேறித்தனம் காட்டாதீர்கள். மாறாக, தகுதியுள்ளவராக இருங்கள். நான் எடுத்து வைத்துள்ள போதனையின்படி செயல்பட முயற்சி செய்யுங்கள். நான் எடுத்து வைத்துள்ள வழிமுறைப்படி நடங்கள். நான் கடந்த குத்பாவிலும் நூஹின் கப்பல் என்ற நூலை குறிப்பிட்டுப் பேசினேன். அதில் நமது போதனையின் ஒரு பகுதி உள்ளது. அதனை ஒவ்வோர் அஹ்மதியும் கண்டிப்பாக படிக்க வேண்டும். மாறாக அன்னார் முழு நூலையும் படிக்குமாறு கூறியுள்ளார்கள். மேலும் அல்லாஹ்வின் வழியில் அழைக்க நமக்கு வாய்ப்பு கிடைக்க வேண்டும். நற்செயல் செய்வதற்கு வாய்ப்பு கிடைக்க வேண்டும். அதன் பக்கமும் இந்த போதனை வழிகாட்டுகிறது. இந்த போதனைதான் நம்மை மிகச் சிறந்த முஃமின் ஆக்கவும் செய்யும்.

நற்செயல்களின் பக்கம் மேலும் கவமூட்டியவாறு அன்னார் கூறுகிறார்கள்: பொதுவாக பார்க்கும்போது மக்கள் லாயிலாஹ இல்லல்லாஹ்வை ஏற்றுக் கொள்கிறார்கள். நபி (ஸல்) அவர்களை நாவளவில் ஏற்றுக் கொள்கிறார்கள். பெயரளவில் தொழவும் செய்கிறார்கள். நோன்பும் வைக்கிறார்கள். அசல் விஷயம் என்னவெனில், ஆன்மீகம் இருப்பதில்லை. மறுபுறம் இந்த நற்செயலுக்கு எதிராக அவர்கள் செயல்படுவதே இவர்களது செயல்கள் நற்செயல்களின் அடிப்படையில் செய்யப்படவில்லை என்பதற்கு சான்று பகர்கின்றது. அல்லாஹ்வின் கட்டளைக்கு எதிராக செயல்படுகின்றனர். அது நமக்கு நிரூபிப்பது என்னவென்றால், இந்த முஸ்லிம்கள் செய்வது நற்செயல்கள் அல்ல. மாறாக சில நற்செயல்களைச் செய்தாலும் அதுவும் சடங்கு சம்பிரதாயமாகவே செய்கின்றனர். ஏனெனில் அதில் களங்கமின்மை சிறிதும் இருப்பதில்லை. இல்லையெனில் அந்த நற்செயல்களின் பரக்கத்துகளும் ஒளிகளும் ஏன் அத்துடன் இல்லாமல் போய் விட்டன? நன்றாக நினைவில் கொள்ளுங்கள். எதுவரை உண்மையான உள்ளத்துடன் ஆன்மீகத்துடன் இந்த அமல் செய்யப்படவில்லையோ அதுவரை அவை பயன் தருவதில்லை. அந்த நற்செயல்களில் எந்த குழப்பமும் இல்லாத போதுதான் நற்செயல் என்று அழைக்கப்படும். ஸாலிஹ் என்பதன் எதிர் சொல் பஸாது ஆகும். ஸாலிஹ் என்பவர் குழப்பத்தில் இருந்து அகன்ற நற்செயல்களை மேற்கொள்பவர் ஆவார். எவரது தொழுகையில் குழப்பம் இருக்குமோ மனதின் விருப்பங்கள் மறைந்துள்ளனவோ அவை அல்லாஹ்வுக்காக செய்யப்பட்டவை அல்ல. அவரது செயல்கள் பூமியிலிருந்து ஒரு ஜான் அளவு கூட மேலே செல்லாது. அதில் களங்கமின்மையின் ஆன்மா இல்லை. அது ஆன்மிகத்திலிருந்து வெறுமையாக உள்ளது.

நற்செயல் என்றால் என்ன என்று விளக்கியவாறு கூறினார்கள்: நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் ஆன்மா மற்றும் ஆன்மீகத்தைத்தான் கருத்தில் கொள்கிறான். வெளிப்படையான அமல்களை கவனிப்பதில்லை. அவன் உண்மையை, உட்புற நிலையை மட்டுமே பார்க்கிறான். அவனது அமல்களில் சுயநலம் உள்ளதா? அல்லாஹ்வுக்கு உண்மையான கட்டுப்படுதலும் களங்கமின்மையும் உள்ளதா? என்று பார்க்கிறான். மனிதன் சில வேளை வெளிப்படையான அமல்களை பார்த்து ஏமாந்து விடுகிறான். அவரது கையில் தஸ்ஃபீஹ் உள்ளது. தஹஜ்ஜுத் தொழுகிறார். இஷ்ராக் தொழுகிறார். வெளிப்படையாக நல்லவர்கள் செய்யும் பணியைச் செய்கிறார். நற்பணிகளைச் செய்கிறார். பொதுவாக கையில் தஸ்ஃபீஹ் உள்ளது. மனிதன் அத்தகையவரை பெரும் நல்லவர் என்று கருதுகிறார். ஆனால் அல்லாஹ்வுக்கு தோல் விருப்பமில்லை. வெளிப்படையான பொருளை அவன் விரும்புவதில்லை. அல்லாஹ் பற்று, உண்மை, நன்றியுணர்வு இல்லாமல் திருப்தி அடைவதில்லை. வெளிப்படையான பொலிவுகள், வெளிப்படையான நிலைமைகளை வெளித் தோல்கள் அல்லாஹ்வுக்கு பிரியமானதல்ல. அதில் பற்றும் உண்மையும் இல்லையெனில் இறைவனுக்கு பிடிக்காது. பற்று விசுவாசமற்ற மனிதன் நாயைப் போன்றவன். மரணித்துப் போன உலகின்போது விழுந்து கிடக்கின்றான். வெளிப்படையாக அவன் நல்லவனாக தெரிந்தாலும் புகழத்தக்க நற்செயல்கள் காணப்பட்டாலும் உள்ளுக்குள் கெட்ட செயல்கள் உள்ளன. தொழுகைகள் காட்டுதலால் நிரம்பி உள்ளது. அந்த தொழுகைகளால் என்ன பயன்? ஆகவே காட்டுதல் உடைய தொழுகைகள் மனிதனுக்கு எந்த பலனையும் தராது. அந்த அமல், அல்லாஹ்வின் பயம் மற்றும் அவனது திருப்தியை வேண்டி செய்யப்படாத நிலையில் எந்த பலனையும் தராது. அந்த அல்லாஹ்வின் வழியில் அழைப்பவரின் பணியும் பயன் தராது. எவ்வளவுதான் அவர்கள் முயற்சி செய்தாலும் சரிதான். ஆகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று இந்த அமல்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பிறகு நற்செயல்கள் செய்வதைப் பற்றி கூறினார்கள்: எந்த மனிதர் ஈமானை நிலைநாட்ட விரும்புகிறாரோ அவர் நற்செயலில் முன்னேற வேண்டும். இது ஆன்மீக விஷயமாகும். செயலின் தாக்கமே கொள்கையின் மீது படுகிறது. உறுதியான ஈமான் பெறுவதற்கு அமல் அவசியமாகும். எவர்கள் தீய செயல்களைச் செய்கிறார்களோ அவர்களுக்கு இறைவன் மீது ஈமான் இல்லை என்று தெரிய வரும் . ஹதீஸில் இதனால்தான் இவ்வாறு வருகிறது. ஒரு திருடன்

திருடும்போது நம்பிக்கையாளராக இருப்பதில்லை. ஒரு விபசாரன் விபசாரம் செய்யும்போது நம்பிக்கையாளனாக இருப்பதில்லை என்று வருகிறது. அதாவது இதன் பொருள் இவர்களது தீய செயல்களை இவர்களுடைய உண்மையான சரியான கொள்கையின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி அதனை அழித்து விட்டது. நமது ஜமாஅத் நற்செயல்களை அதிகமாக செய்ய வேண்டும். இவர்களும் மற்றவர் போன்று இருந்தால் என்ன வித்தியாசம் இருக்கும்? பிறகு இவர்களை பாதுகாக்க வேண்டும்; பொருட்படுத்த வேண்டும் என்ற தேவை இறைவனுக்கு ஏன் உள்ளது? தக்வா, தூய்மை, உண்மையான கட்டுப்படுதலுடன் அவனை மகிழ்ச்சிப்–படுத்தினால்தான் இறைவன் அவனை பொருட்படுத்துவான். நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்கு எவருடன் எந்த உறவு முறையும் இல்லை. வெறும் வெளி வார்த்தைகள் எதனையும் பெற்றுத் தராது. பற்று இல்லையெனில் வெறும் வார்த்தைகளால் எந்தப் பயனும் இல்லை.

உண்மையான கட்டுப்படுதல் ஒரு மரணம் ஆகும். அதனை செய்யாதவர் இறைவனுடன் சதுரங்கம் ஆடுகிறார். அவருக்கு தேவைப்படும் போது இறைவனை திருப்திப்படுத்துகிறார். தேவை நிறைவேறாவிட்டால் கோபம் கொள்கிறார். நம்பிக்கையாளர் இவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது. சிந்தித்துப் பாருங்கள். அல்லாஹ் எல்லா களத்திலும் வெற்றியையே தந்து கொண்டிருந்தால் எந்த ஒரு தோல்வியும் வரவே இல்லை எனில் எல்லா உலகமும் ஏகத்துவவாதிகளால் நிரம்பி விடாதா? இறைவனை ஏற்பவர்களாக ஆகி விடாதா? என்ன சிறப்புத் தன்மை இருக்கும்? ஒருவர் துன்பத்திலும் கூட உண்மை மற்றும் பற்று காட்டும்போதுதான் இறைவன் அவரிடம் திருப்தி அடைகிறான். ஆகவே நற்செயல் என்பது கட்டுப்படுதல் முழுமையாக இருக்கும்போதுதான் ஏற்படும். முழுமையான கட்டுப்படுதலுடன் அமல் செய்யும்போதுதான் அது நற்செயல் ஆகும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அதை செய்ய வேண்டும். தமது விருப்பம் என்ற சுவரை முழுமையாக உடைத்து விட வேண்டும். முழுக்க முழுக்க ஒரே நோக்கம்தான் இருக்க வேண்டும். நமது ஒவ்வொரு அமலுக்குப் பின்னாலும் இறைவனது திருப்தியை முற்படுத்த வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப அமல் செய்ய வேண்டும். உண்மையான கட்டுப்படுதல் இதுதான். பயன் கிடைத்தால் கட்டுப்படுதலை அறிவித்து விட்டு அங்கு தாம் விரும்பிய படி வேலை நடக்கா விட்டால் புகார் கூறுவதல்ல. எப்போதும் நினைவில் கொள்ளுங்கள் . அமைப்பின் மீதும் தேவையற்ற முறையீடுகள் செய்வது அமைப்பை விட்டு விலக்கி விடும். பிறகு மார்க்கத்தை விட்டு அகற்றி விடும். பிறகு கிலாஃபத்தை விட்டு அகற்றி விடும். பிறகு மனிதனுக்கு அல்லாஹ்வை விட்டும் விலக்குதல் உருவாகி விடும். இந்த விளைவு சிலரிடம் ஏற்பட்டிருப்பதை நாம் பார்த்துள்ளோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நாம் வெற்றி பெறுவதற்கான ஆயுதம் இஸ்திக்ஃபார், தக்வா, மார்க்க அறிவு பெற்றிருத்தல் ஆகும். அல்லாஹ்வின் மகத்துவத்தை கருத்தில் கொள்வது, ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றுதல் ஆகும். தொழுகை துஆ ஏற்றுக்கொள்ளப்படுதலின் திறவுகோல் ஆகும். தொழுது துஆ செய்யுங்கள். கவனமின்மையை காட்டாதீர்கள். ஒவ்வொரு தீமையிலிருந்தும் அது அல்லாஹ்வின் உரிமையானாலும் சரி, அடியார்களின் உரிமை சார்ந்ததாக இருந்தாலும் சரி அதிலிருந்து விலகி இருங்கள். அல்லாஹ் நம்மை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தூதுச் செய்தியைப் பரப்பவும் அதனை மேலொங்கச் செய்யவும் அதில் பங்கெடுக்கவும் தவ்பா இஸ்திக்ஃபாருடன் துஆ செய்தவாறு தப்லீக் பணிகளைச் செய்பவர்களாக்கவும் அல்லாஹ் உடைய உரிமை மற்றும் அடியார்களின் உரிமையை நிறைவேற்றுபவராகவும் செய்வானாக. அந்த உரிமைகள்தான் நற்செயல் செய்வதற்கு கவனமூட்டுகின்றன. நமது ஒவ்வொரு பணியிலும் அல்லாஹ்வின் திருப்தி நோக்கமாக இருக்கட்டுமாக. அல்லாஹ்விற்கு முழுமையான கட்டுப்படுபவர்களில் நாம் இணைவோமாக. நாம் இந்த விஷயங்களில் கவனம் செலுத்துவோம் எனில் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கு ஏற்ப இஸ்லாத்தின் வெற்றியின் நாட்களையும் பார்ப்பவர்களாவோம். அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஆனால், அந்தோ பரிதாபம்! உலகம் இறைவனது இப்புதிய தோற்றத்தின் மீது பகைமை கொண்டு விட்டதே! இவர்களின் கரங்களில் கதைகளைத் தவிர வேறு எதுவுமே இல்லை! இவர்களின் இறைவன் இவர்களின் சொந்த கற்பனைகளே! அவர்களின் இதயங்கள் கோணலாய் இருக்கின்றன. அவர்களது தைரியங்களெல்லாம் குன்றி விட்டன! அவர்களின் கண்கள் மீது திரைகள் போடப்பட்டிருக்கின்றன. மேலும், பிற சமுதாயங்கள் உண்மையான இறைவனை இழந்து விட்டன. மனிதக் குழந்தைகளை தெய்வமாக்கி விட்டவர்களைக் குறித்து நாம் என்ன கூறுவது ?

முஸ்லிம்களின் நிலையைப் பாருங்கள். இவர்கள் இறைவனை விட்டும் எந்த அளவுக்கு தூரம் சென்று விட்டனர்! உண்மைக்கு பெரும் பகைவர்கள் ஆகி விட்டனர். இவர்கள் நேர்வழிக்கு உயிர்ப் பகைவரைப் போன்று எதிரிகளாக இருக்கின்றனர். உதாரணமாக, இஸ்லாத்திற்காக வாதம் புரிந்து வந்த 'நத்துவத்துல் உலமா' (என்னும் ஆலிம்களின் பேரவை) அல்லது இஸ்லாத்தின் பெயரால் முஸ்லிம்களிடமிருந்து பொருள் திரட்டி வரும் 'அஞ்சுமனே ஹிமாயத்துல் இஸ்லாம் லாஹூர்' என்னும் பேரவை ஆகியவை இஸ்லாத்தின் நன்மையை நாடக்கூடியவையா ? இவர்கள் 'ஸிராத்துல் முஸ்தகீம்' என்னும் நேரான பாதைக்கு உதவி செய்கிறார்களா ? இஸ்லாம் எப்படிப்பட்ட சோதனைகளால் நசுக்கப்பட்டிருக்கிறதென்றும் அதனை மீண்டும் புதுப்பிப்பதற்கு இறைவனது நடைமுறை என்ன ? என்பதைக் குறித்தும் இஸ்லாத்தை பாதுகாப்பதாக கூறி வரும் இவர்களின் வாதம் ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு தகுதியுள்ளதாக இருந்திருக்கும் என்பதை உண்மையாகவே கூறுகிறேன். ஆனால், இஸ்லாத்திற்கு உதவி புரிந்து வருவதாக வாதம் செய்த இவர்கள் எப்போது வானத்திலிருந்து நட்சத்திரம் வெளியானதோ அப்போது எல்லாரையும் விட முதலாவதாக இவர்களே நிராகரித்தனர் என்ற இறைவனது குற்றச்சாட்டிற்கு இப்போது உட்பட்டவர்களாய் இருக்கிறார்கள். என்னைக் குறித்த நேரத்தில் அனுப்பிய அந்த இறைவனுக்கு இப்போது அவர்கள் என்ன பதில் கூறுவார்கள் ? ஆனால் இவர்களுக்கு இதனைப் பற்றி எவ்வித கவலையுமில்லை.

சூரியன் நடுப்பகலை நெருங்கி விட்டது. ஆனால், இப்போதும் அவர்களுக்கு இரவாகவே இருக்கிறது. இறைவனது நீருற்று சுரக்கத் தொடங்கி விட்டது. ஆனால் அவர்கள் இன்னும் பாலைவனத்தில் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றனர். அவனது ஆன்மீக ஞானங்களின் ஆறு ஒன்று ஓடிக் கொண்டிருக்கின்றது. ஆனால், அவர்கள் ஒன்றுமே அறியாதவர்களாய் இருக்கின்றனர். ஆனால், இவர்கள் முற்றிலும் கவனமற்றவராய் இருக்கின்றனர். கவனமற்றவராய் இருப்பது மட்டுமின்றி இறைவனது இயக்கத்துடன் பகைமை பாராட்டுகின்றனர்.

ஆகவே இவர்களது கரங்களால் நடைபெற்று வரும் 'ஹிமாயத்தே இஸ்லாம்' (இஸ்லாத்திற்கு உதவி புரிவது), 'தர்வீஜே இஸ்லாம்' (இஸ்லாத்தை நடைமுறைப்படுத்துவது), தஃலீமே இஸ்லாம் (இஸ்லாத்தை போதிப்பது) என்பது இதுதானா ? ஆரம்பத்திலிருந்தே எல்லா நபிமார்களும் சாட்சியம் அளித்து வந்திருக்கும் இறைவனது உண்மையான நாட்டத்தை இவர்கள் தங்களின் புறக்கணிப்பால் தடை செய்து விடுவார்களா ? சாத்தியமே இல்லை. மாறாக, நிச்சயமாக நானும் எனது தூதரும் வெற்றி பெற்றே தீருவோம் **(58:22)** என்ற இறைவனது இந்த முன்னறிவிப்பு விரைவில் உண்மையாகப் போகிறது.

இன்றிலிருந்து பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இறைவன் தனது அடியானின் உண்மைக்குச் சான்றாக ரமலான் மாதத்தில் சூரிய கிரகணத்தையும், சந்திர கிரகணத்தையும் ஏற்படுத்தினான். இரவின் பிரகாசத்தையும் பகலின் பிரகாசத்தையும் வெளிப்படுத்தினான். அவ்வாறே அவன் நபிமார்களின் முன்னறிவிப்பிற்கேற்ப பூமியில் இரு அடையாளங்களை வெளிப்படுத்தினான். அவற்றில் ஓர் அடையாளத்தை நீங்கள் திருக்குர்ஆனில் படிக்கின்றீர்கள். அதாவது: 'வ இதல் இஷாரு உத்திலத்' - பத்து மாத கருக்கொண்ட ஒட்டகங்கள் கைவிடப்படும். ***(81:5)*** மேலும், ஹதீஸிலும் படிக்கின்றீர்கள். 'வலயுத்ர கன்னல் கிலாஸு ஃபலா யுஸ்ஆ அலைஹா' - ஒட்டகங்கள் கை விடப்படும்; அவற்றின் மீது சவாரி செய்யப்படமாட்டாது. (சஹீஹ் முஸ்லிம்) இது நிறைவேறும் பொருட்டு மக்கத்து ஹஜாஸ் பூமியில் அதாவது, மக்கா மதீனா நகரங்களில் தொடர் வண்டியும் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது.

**(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 3)**

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜெர்மனியில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது அல் – அய்ன் என்ற பெயரில் ஒரு மொபைல் ஐ–கிளினிக்கை தொடங்கி வைத்தார்கள். இந்த மொபைல் ஐ–கிளினிக் ஆப்பிரிக்காவிலுள்ள பெனின் நாட்டில் பயன்படுத்தப்படும். ஜெர்மனியிலுள்ள ஹொமியோபதி ஃபஸ்ட் என்ற ஓர் அமைப்பு ஆப்பிரிக்காவில் அடிகுழாய் மற்றும் பைப்புகளை பொருத்துகின்ற ஒரு பணியையும் செய்ய இருக்கின்றது. இதற்கு ஹுஸூர் அவர்களின் வழிகாட்டலின் பேரில் Boring Rig வாங்கப்பட்டிருக்கின்றது. இந்த Boring Rig கேம்பியாவிலுள்ள பாஞ்சல் மற்றும் டோகோ ஆகிய இடங்களில் பயன்படுத்தப்படுவதற்காக வாங்கப்பட்டிருக்கிறது. மேலும் இரண்டு ஆம்புலன்ஸுகளும் வாங்கப்பட்டுள்ளன. இவற்றை ஹுஸூர் அவர்கள் பார்வையிட்டார்கள். மேலும், வக்ஃபே நவ் காதிம்களுடன் ஹுஸூர் அவர்களுடைய ஒரு வகுப்பும் நடைபெற்றது.** [அறிக்கை: அப்துல் மாஜித் தாஹிர், கூடுதல் வக்கீலுத் தஃப்ஷீர், இலண்டன்]

23 ஏப்ரல் 2017 அன்று ஹுஸுர் அய்யதஹுல்லா-ஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் காலை 10.00 மணிக்கு அல்-அய்ன் மொபைல் ஐ- கிளினிக்கை தொடக்கி வைத்தார்கள். அதற்குப் பிறகு ஹுஸுர் அவர்கள் அல்-அய்ன் மொபைல் ஐ-கிளினிக்கை பார்வையிட்டார்கள். அந்த மொபைல் ஐ-கிளினிக்கின் ஒரு பகுதியில் வைக்கப்பட்டிருந்த பலகையை ஹுஸுர் அவர்கள் திறந்து வைத்து துஆ செய்தார்கள். ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஜெர்மனியிலுள்ள ஹொமியோபதி ∴பஸ்ட் என்ற அமைப்பிற்கு ஒரு மொபைல் ஐ-கிளினிக்கை ஆயத்தம் செய்யும்படி கட்டளையிட்டார்கள். இதற்காக அந்த அமைப்பு ஒரு காலி டிரெய்லரை 11,000 யுரோ கொடுத்து ஜமாஅத்திற்காக வாங்கியது. அதற்குப் பிறகு இந்த டிரெய்லரில் தேவையான அனைத்து மருத்துவக் கருவிகளும் பொருத்தப்பட்டன. இந்த பணி 20 டிசம்பர் 2016 அன்று ஆரம்பமானது. அதாவது அன்றுதான் டிரக் டிரெய்லர் இதற்காக வாங்கப்பட்டது. நான்கு மாதங்கள் முயற்சி செய்த பிறகு ஐ-கிளினிக் முழுமையான முறையில் ஆயத்தம் செய்யப்பட்டு விட்டது. ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை சிறந்த முறையில் அவர்கள் செய்து முடித்தனர். இந்த மொபைல் ஐ-கிளினிக்கில் 4 அறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஓர் அறை பரிசோதனை அறையாகப் பயன்படுத்தப்படும். அதில் கண்ணுடன் தொடர்புடைய நோய்கள் தொடர்பாக முதலில் பரிசோதனை செய்து, என்ன நோய் ஒருவரை பாதித்திருக்கிறது என்பது கண்டறியப்படும். இன்னொரு அறை ஒர்க்ஷாப் அறையாகப் பயன்படுத்தப்படுகிறது. அதில் எல்லா விதமான கண்ணாடிகளும் அப்போதே தயார் செய்யப்பட்டு தேவையானவர்களுக்கு அப்போதே உடனடியாக வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த டிரெய்லர் தொடர்பாகக் குறிப்பிட வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால் இதில் ஆபரேஷன் தியேட்டரும் இருக்கின்றது. அங்கு மிகச் சிறந்த முறையில் தூய்மையான சூழலில் கண் அறுவை சிகிச்சைக்கான வசதி செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக கேட்ராக்ட், அதாவது கண்ணில் சதை வளர்வதனால் ஏற்படுகின்ற நோயின் பாதிப்பில் இருந்து காப்பாற்றுவதற்குத் தேவைப்படும் அறுவை சிகிச்சையும் செய்வதற்கான வசதி இந்த கிளினிகில் இருக்கின்றது. இந்த எல்லா வகையான அறுவை சிகிச்சையும் அதற்குரிய கருவிகளும் ஜெர்மனியில் செய்யப்படுகின்ற அறுவை சிகிச்சையின் தரத்திற்கு ஏற்ப இருக்கின்றது. இந்த ஆபரேஷன் தியேட்டரை ஒட்டி ஒரு மல்டி ∴பங்க்ஷனல் அறையும் இருக்கின்றது. அதில் தண்ணீர் மற்றும் ஏனைய முக்கிய பொருட்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் நோயாளி-களுக்கான படுக்கைக்குரிய வசதியும் அங்கு செய்யப்பட்டிருக்கின்றது. இங்கு தான் அறுவை சிகிச்சை நடைபெறுவதற்கு முன்னதாக நோயாளி அதற்காக ஆயத்தம் செய்யப்படுகின்றார். உதாரணமாக, அனஸ்தீஸியா போன்றவை நோயாளிக்கு கொடுக்கப்படுகின்றது. மேலும் இதே அறை அங்கு பணி புரிபவர்களுக்கு ஓய்வெடுக்கக் கூடிய அறையாகவும் அவர்களது ஏனைய தேவைகளை நிறைவேற்றக்கூடிய அறையாகவும் பயன்படுத்தப்படும். மேலும், ஆபரேஷனுக்காக பணியில் இருப்பவர்கள் தங்களை ஆயத்தப்-படுத்திக் கொள்ளவும் இந்த அறை பயன்படும். மேலும், இந்த அறையில்தான் நோயாளிக்காக ப்ரீ-ஆப்ரேடிவ் மற்றும் போஸ்ட்-ஆபரேடிவ் கேரியர் ரூம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதாவது அறுவை சிகிச்சை நடைபெறுவதற்கு முன்னதாக ஒரு நோயாளிக்கு என்னென்ன தேவை இருக்கின்றதோ அந்த தேவைகளை அறிந்து நிறைவேற்று-வதற்கான அறையாக இது பயன்படுத்தப்படுகிறது. இந்த மொபைல் கிளினிக்கில் முழுமையாக கண் பரிசோதனை செய்வதற்கான அனைத்து வசதிகளும் இருக்கின்றன. இந்த கண் பரிசோதனை சாதாரணமாகவும் நடைபெறும். அது தவிர்த்து தேவைப்படும் நோயாளிகளுக்கு ஆடோமெடிக்காகவே கண் பரிசோதனை செய்வதற்கான வசதி இதில் இருக்கின்றது. அதற்காக ஆட்டோ ரி∴ப்ராக்டர் மீட்டர் என்ற கருவியும் பொருத்தப்பட்டிருக்கிறது. கோர்னியா பரிசோதனை செய்வதற்கான வசதியும் இதில் இருக்கிறது. கோர்னியா என்றால் விழியின் வெண்படலத்தைக் குறிக்கிறது. அதாவது கண் விழியின் முன்பாகத்தை மூடியுள்ள ஒளி ஊடுருவிச் செல்லக்கூடிய வெண்மையான ஜவ்விற்கு கோர்னியா என்று பெயர். அந்த கோர்னியாவில் ஏற்படுகின்ற பாதிப்புகளைச் சரி செய்வதற்கான வசதிகளும் இந்த கிளினிக்கில் இருக்கின்றது. அதைத் தவிர, ஏற்கனவே கூறியது போன்று, கண்ணில் சதை வளர்ந்தால் அதனை அகற்றுவதற்கான அறுவை சிகிச்சையும் இங்கு செய்யப்படும். அறுவை சிகிச்சை நடந்து முடிந்த பிறகு முழுமையான சுகம் ஒருவருக்குக் கிடைத்த பிறகும் கூட கண்களில் இருக்கின்ற காயம் நீங்கும் வரை, அந்த காயத்திற்கான சிகிச்சையும் இந்த கிளினிக்கில் முழுமையாக வழங்கப்படும். பிறகு எல்லா வகையான கண்ணாடிகளையும் தயார் செய்வதற்கான வசதியும் கூட இந்த கிளினிக்கில் இருக்கின்றது. இந்த மொபைல் கிளினிக்கை ஆயத்தம் செய்வதற்காக மொத்தம் 55,000 யூரோ செலவாகி இருக்கின்றது. இந்த மொபைல் கிளினிக் மனித குலத்திற்குத் தொண்டு செய்வதற்காக முதன்முதலாக ஆப்பிரிக்காவில் உள்ள பெனின் நாட்டிற்கு அனுப்பப்படும். ஹுஸுர் அவர்களுடைய விருப்பம் என்னவென்றால் ஜெர்மனியிலுள்ள ஹோமியோபதி ∴பஸ்ட் என்ற இந்த அமைப்பிடம் ஒரு போரிங் ரிக் இருக்க வேண்டும். அதன் மூலமாக ஆப்பிரிக்காவிலுள்ள பல பகுதிகளில் அடி பம்புகளும் பைப்புகளும் பொருத்தப்பட வேண்டும். இதில் மேலும் நல்ல வசதிகளை செய்து தருவதற்கு ஜமாஅத் முயற்சி செய்ய வேண்டும். இது ஹுஸுர் அவர்களின் எதிர்பார்ப்பாகும். ஹோமியோபதி ∴பஸ்ட் ஜெர்மனி என்ற அமைப்பு Mercedes Bonz Uninog Boring Rig ஒன்றை வாங்கியிருக்கிறது. இந்த இயந்திரம் தண்ணீரின் சக்தியால் ஓட்டப்படுகின்ற இயந்திரமாகும். 150 மீட்டர் வரை நிலத்தில் ஆழத்தை ஏற்படுத்துகின்ற டிரில் இதில் இருக்கின்றது. அதாவது 150 மீட்டர் வரை துளையிட்டு குழாய்களைப் பதிக்க முடியும். இதனுடைய இன்னொரு சிறப்பம்சம் மிக எளிதாக அதைக் கொண்டு செல்லக்கூடிய வசதி இந்த இயந்திரத்தில் இருக்கின்றது. இந்த Boring Rig உடன் சில முக்கிய கருவிகளும் பொருத்தப்-பட்டிருக்கின்றன. உதாரணமாக, பல்வேறு வகையான பைப் இதில் இருக்கின்றது. ஒரு பைப்பினுடைய நீளம் ஏறத்தாழ 150 மீட்டர் இருக்கின்றது. இதைத் தவிர பல்வேறு டிரில்கள் இருக்கின்றன. பல்வேறு வகையான நிலங்களைத் தோண்டுவதற்கு அந்த டிரில்கள் பயன்படுத்தப்படு-கின்றன. இந்த Boring Rig -ஐ ஹோமியோபதி ∴பஸ்ட் ஜெர்மனி 32,000 யூரோ கொடுத்து வாங்கி இருக்கின்றது. ஆப்பிரிக்க நாடுகளில் அடிகுழாய்கள் அமைப்பதற்கு இந்த Boring Rig பயன்படுத்தப்-படும். ஹுஸுர் அவர்கள் இவற்றை ஆய்வு செய்தார்கள். இந்த ஐ-கிளினிக் மற்றும் இந்த Boring Rig எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதைப் பற்றி பல்வேறு விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். பிறகு வழிகாட்டல்களையும் வழங்கினார்கள். இதைத் தவிர ஹோமியோபதி ∴பஸ்ட் ஜெர்மனிக்கு இரண்டு ஆம்புலன்ஸுகளை வாங்குவதற்கான நல்வாய்ப்பும் கிடைத்திருக்கின்றது. இதில் ஒரு ஆம்புலன்ஸ் கேம்பியாவிலுள்ள பாஞ்சல் என்ற இடத்திற்கு அனுப்பப்படுகின்றது. இன்னொரு ஆம்புலன்ஸ் டோகோவிற்கு அனுப்பப்படுகின்றது. ஹுஸுர் அவர்கள் இந்த இரண்டு ஆம்புலன்ஸு-களையும் பார்வையிட்டார்கள். இன்று வக்∴பே நவ் காதிம்களுக்கான (அதாவது ஜமாஅத்திற்காக தமது வாழ்வை அர்ப்பணித்திருக்கும் வக்∴பே நவ் திட்டத்திலுள்ள காதிம்கள்) மற்றும் வக்∴பே நவ் திட்டத்திலுள்ள சிறுமிகளுக்கான ஒரு வகுப்பு ஹுஸுர் அவர்களுடன் நடைபெற்றது. இதில் வக்∴பே நவ் குத்தாம் மற்றும் சிறுமிகள் கலந்து கொண்டனர். இந்த வகுப்பிற்கான ஏற்பாடு பள்ளிவாயிலை ஒட்டியிருந்த ஒரு ஹாலில் செய்யப்பட்டிருந்தது.

**வக்ஃபே நவ் காதிம்களுடன் ஹுஸூர் அவர்களின் வகுப்பு:**

சரியாக 11.30 மணிக்கு ஹுஸுர் அவர்கள் ஹாலிற்கு வருகை தந்தார்கள். வக்∴பே நவ்

ஹாதிம்களுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. ஹம்மாத் அஹ்மத் திருக்குர்ஆன் ஓதினார். பிறகு அதன் மொழியாக்கத்தை தவ்கீர் அஹ்மத் ஸுஹைல் வாசித்துக் காட்டினார். அதற்குப் பிறகு தஆதத் அஹ்மத் என்ற ஒரு காதிம் நபிமொழி ஒன்றை எடுத்துக் கூறினார். அதனை உன்ஸர் அஃப்ஸல் என்ற ஒரு காதிம் மொழிபெயர்த்துக் கூறினார்.

***நபிமொழி:***

அவர் வாசித்த நபிமொழி இதுவாகும். ஹஸ்ரத் ஸஹல் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். அவர் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கு ஒரு பணியைச் செய்யும் படி நீங்கள் கூற வேண்டும். அந்த பணியைச் செய்வதன் மூலமாக அல்லாஹ்வும் என்னிடத்தில் அன்பு கொள்ள வேண்டும். மக்களும் என்னை நேசிக்க வேண்டும். அத்தகைய ஒரு செயலை நீங்கள் எனக்குக் கூறுங்கள் என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் நீர் உலகை விரும்பாமல் இருப்பீராக. தன்னிறைவு பெற்ற மனிதராக இருப்பீராக. அப்போது அல்லாஹ் உம்மிடத்தில் அன்பு கொள்வான். அடுத்து மக்களிடம் என்ன இருக்கின்றதோ அது உமக்குக் கிடைக்க வேண்டும் என்று நீர் விரும்பாமல் இருப்பீராக. அதன் மூலமாக மக்களும் உம்மீது அன்பு கொள்வார்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (இப்னு மாஜா பாபு ஸுஹ்த் ஃபித்துன்யா ஹதீகதுஸ் ஸாலிஹீன் ஹதீஸ் 803 பக்கம் 640)

இதற்குப் பிறகு இம்ரான் ஸக்கா சாஹிப் என்ற காதிம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது கீழ்க்காணும் மேற்கோள்களைப் படித்துக் காட்டினார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவனுடைய அடியார் யார்? அல்லாஹ் வழங்கியுள்ள வாழ்க்கையை அல்லாஹ்வின் வழியில் அர்ப்பணித்து விடுபவர்களே இறைவனுடைய அடியார்கள் ஆவார்கள். தனது உயிரை இறைவனுடைய வழியில் தியாகம் செய்வதற்கும் தனது செல்வத்தை அவனது வழியில் செலவு செய்வதற்கும் கிடைக்கின்ற வாய்ப்பை அல்லாஹ்வின் அருளாகவும் தங்களுக்குக் கிடைத்த நற்பாக்கியமாகவும் அவர்கள் கருதுகின்றனர். ஆனால், எவர்கள் உலகின் சொத்து மற்றும் நிலங்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதையே குறிக்கோளாக வைத்திருக்கின்றார்களோ, அந்த குறிக்கோளிலேயே இன்பம் காண்கின்றார்களோ அவர்கள் மிகவும் சாதாரண பார்வையுடன் இந்த மார்க்கத்தைப் பார்க்கின்றார்கள். அவர்கள் உண்மையான நம்பிக்கையாளர்கள் அல்ல. உண்மையான நம்பிக்கை கொண்டவர்களுடைய பணி ஒருபோதும் இவ்வாறு இருக்காது. அல்லாஹ்வின் வழியில் தனது எல்லா ஆற்றல்களையும் சக்திகளையும் வாழ்நாள் இருக்கின்ற வரை அர்ப்பணித்து விடுவதே உண்மையான இஸ்லாமாக இருக்கிறது. அதன் மூலமாக ஒருவருக்கு தூய்மையான வாழ்க்கை கிடைக்கின்றது. தூய்மையாக வாழ்க்கைக்கு அவர் வாரிசாகின்றார்.

அல்லாஹ், இறைவனுக்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணிப்பது தொடர்பாக இவ்வாறு திருக்குர்ஆனில் நமக்கு வழிகாட்டுகின்றான். அல்லாஹ் கூறுகின்றான்.

مَنْ اَسْلَمَ وَجْهَهٗ لِلّٰهِ وَهُوَ مُحْسِنٌ فَلَهٗٓ اَجْرُهٗ عِنْدَ رَبِّهٖ
وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ﴿١١٣﴾

எவர் தன்னை முழுமையாக அல்லாஹ்விடம் ஒப்படைத்து நன்மைகளைச் செய்கின்றாரோ அவருக்குரிய கூலி அவரது இறைவனிடம் இருக்கின்றது. அவருக்கு எந்தவொரு அச்சமும் இருக்காது. அவருக்கு எந்தவொரு கவலையும் ஏற்படாது. (2:113) இந்த இடத்தில் அஸ்லம வஜ்அஹு லில்லாஹி என்பதன் பொருள் என்னவென்றால், ஒருவர் தன்னை ஒன்றுமற்றவராகக் கருதியவாறு எளிமையான ஆடையை அணிந்தவாறு இறைவன் முன்னிலையில் வீழ்ந்து விடுவதாகும். தனது உயிர், செல்வம், கண்ணியம், சுருக்கமாக அனைத்தையும் அவனிடத்தில் ஒப்படைத்து விடுவதாகும். இறைவனுக்காகவே தன்னை அர்ப்பணித்து விடுவதாகும். மேலும் உலகத்தையும் அதிலுள்ள எல்லா பொருள்களையும் மார்க்கத்திற்குத் தொண்டு செய்வதற்காகத் தரப்பட்டவையாக அவர் கருத வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 364)

மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: சஹாபாக்களின் வாழ்க்கையை நீங்கள் பார்க்க வேண்டும். அவர்கள் ஒருபோதும் இவ்வுலக வாழ்க்கையை நேசிப்பதில்லை. எல்லா சமயத்திலும் மரணிப்பதற்கு அவர்கள் ஆயத்தமாக இருந்தார்கள். பைஅத் என்பதன் பொருள் ஒருவர் தன்னையே விற்று விடுவதாகும். மனிதன் தனது வாழ்க்கையை அல்லாஹ்வின் வழியில் அர்ப்பணித்த பிறகு உலகத்தைப் பற்றியே பேச்சு இடையில் வருவதே சரியல்ல. உலகத்தைப் பற்றிய பேச்சு ஏன் வர வேண்டும்?

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 504)

தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: சஹாபா (ரலி) அவர்களுக்கு இந்த உலகத்துடன் எந்த தொடர்பும் இருக்கவில்லை. அவர்களுக்கு சொத்துகளும் இருந்தன. செல்வமும் இருந்தது. பொருள்களும் இருந்தன. ஆனால் அவர்களது வாழ்வில் எத்தகைய மகத்தான புரட்சி ஏற்பட்டு விட்டது என்றால் ஒரு நொடிப்பொழுதில் இவை அனைத்தையும் விட்டு விலகி விடுவதற்கு அவர்கள் தயாராகி விட்டனர். குல் இன்னஸ் ஸலாத்தி வ நுஸ்கி வ மஹ்யாய வமமாதி லில்லாஹி ரப்பில் ஆலமீன். அதாவது நீர் கூறுவீராக! நிச்சயமாக எனது தொழுகையும் எனது தியாகமும் எனது வாழ்வும் மரணமும் எல்லா உலகங்களையும் படைத்துக் காத்தோம்புகின்ற அல்லாஹ்விற்கே உரியதாக இருக்கின்றது என்ற வாழ்வும் மரணமும் எல்லா உலகங்களையும் படைத்துக் காத்தோம்புகின்ற அல்லாஹ்விற்கே உரியதாக இருக்கின்றது என்ற வசனத்தின் கீழ் வந்து விட்டவர்களாக அவர்கள் இருந்தனர். அதாவது தங்களிடமுள்ள அனைத்தையும் இறைவழியில் அர்ப்பணித்து விடுவதற்கு அவர்கள் தீர்மானித்திருந்தனர். இவை அனைத்துமே அல்லாஹ்விற்குரியதாகும் என்று அவர்கள் கருதியிருந்தனர். நம்மிடமும் இதுபோன்ற மக்கள் உருவாகி விட்டால் விண்ணிலிருந்து எந்த அருள்தான் இறங்காமல் இருக்கும்? மேலும் விண்ணிலிருந்து இறங்குகின்ற அருள்களில் இதை விட மகத்தான அருள் வேறு எதுவாக இருக்க முடியும்?

(அல்ஹகம் தொகுதி 7 பக்கம் 24, 30 ஜுன் 1903)

இதற்குப் பிறகு மன்னான் அஹ்மத் என்ற சிறுவர் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களது ஒரு கவிதையைப் பாடினார்கள். சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஜெர்மனியாக இருக்கின்ற மதிப்பிற்குரிய ஸய்யிது ஹஸனாத் அஹ்மத் சாஹிப் அவர்களும் ஒரு வக்ஃபே நவ் காதிமாக இருக்கின்றார்கள். அவர்கள் வாகிஃபீனே நவ், அதாவது ஜமாஅத்திற்காகத் தன்னை அர்ப்பணித்தவர்களுடைய பொறுப்புகள் என்ற தலைப்பில் ஹுஸூர் அவர்களுடைய கட்டளைகளின் ஒளியில் ஒரு சொற்பொழிவை வாசித்துக் காட்டினார்கள்.

***வாகிஃபீனே நவ் (அதாவது ஜமாஅத்திற்காகத் தம்மை அர்ப்பணித்தவர்களின்) பொறுப்புகள்:***

மதிப்பிற்குரிய ஸய்யிது ஹஸனாத் அஹ்மத் சாஹிப், சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஜெர்மனி அவர்கள் வாசித்த கட்டுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்: எனது அன்பான எஜமானராகிய ஹுஸூர் அவர்களே! இங்கு, இந்த வகுப்பில் கிலாஃபத்திற்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடக்கின்ற வாகிஃபீனே நவ், அதாவது ஜமாஅத்திற்காகத் தம்மை அர்ப்பணித்த இளைஞர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் பதினைந்து வயது நிரம்பியதும் தமது வக்ஃபை புதுப்பித்துக் கொண்டார்கள். ஏற்கனவே இவர்கள் இறுதி இலக்கை அடைந்திருந்தார்கள். அதாவது இறுதி பள்ளி படிப்பு அவர்களுக்கு முடிந்திருந்தது. பிறகு அவர்கள் தங்களை வக்ஃப் செய்து ஜமாஅத்திற்காக அர்ப்பணித்து விட்டார்கள். மீண்டும் தமது வக்ஃபை அவர்களே புதுப்பித்துக் கொண்டார்கள். அதாவது, காலத்தின் கலீஃபாவிடம் அவர்கள் தங்களை முற்றிலும் ஒப்படைத்து விட்டதாக உடன்படிக்கை எடுத்துக் கொண்டார்கள். மேலும், நமது அன்பான எஜமானர் அவர்களை எங்கு தொண்டு செய்வதற்காகக் கட்டளையிட்டாலும், எங்கு தொண்டு செய்வதற்கான வாய்ப்பை வழங்கினாலும் அதனை அவர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வதாகவும், அதனை தங்களது நற்பாக்கியமாகக் கருதுவதாகவும் அவர்கள் உடன்படிக்கை எடுத்துள்ளனர். அன்பான எஜமானராகிய ஹுஸூர் அவர்களிடம் நாங்கள் துஆவிற்காக வேண்டுகின்றோம். அதாவது அல்லாஹ் எங்களது இந்த தியாகத்தை தனது அருளால் ஏற்றுக் கொள்வானாக. எங்களுக்கு அவன் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் மார்க்கத்திற்குத் தொண்டாற்றக்கூடிய வாய்ப்பை வழங்கிக் கொண்டே இருப்பானாக. அன்பான வக்ஃபே நவ் சகோதரர்களே! வாழ்வை இந்த ஜமாஅத்திற்காக அர்ப்பணித்திருக்கும் இளைஞர்களே! இது நமது ஒரு நற்பாக்கியமாக இருக்கின்றது. அதாவது நமது பெற்றோர்கள் வக்ஃபே நவ் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட அந்த நாட்களில் நம்மை இந்த அருளுக்குரிய திட்டத்திற்கு ஏற்ப ஜமாஅத்திற்காக வக்ஃப் செய்து விட்டார்கள். பிறகு நமக்குச் சரியான தர்பிய்யத்தையும் வழங்கினார்கள். இன்று நம்மையே நாம் நமது சுய விருப்பத்துடன் இந்த வக்ஃபிற்காக, அதாவது ஜமாஅத்திற்காக அர்ப்பணிப்பதற்காக முன்வந்திருக்கின்றோம். நாம் எந்த அளவு நற்பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றோம். அதாவது, காலத்தின் கலீஃபா நாம் எடுத்து வைக்கின்ற ஒவ்வோர் அடியிலும் நமக்கு வழி காட்டக் கூடியவராக இருக்கின்றார். தொண்டு செய்வதற்கான களத்திறகுச் செல்வதற்காக அவர் நம்மை ஆயத்தப்படுத்துகின்றார்.

ஸய்யிதுனா வ இமாமனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் அவர்கள் ஒருமுறை தமது தூதுச் செய்தி ஒன்றில் நம்மை நோக்கி இவ்வாறு கூறுகின்றார்கள்: ஒவ்வொரு வக்∴பே நவ்வும், அதாவது ஜமாஅத்திற்காகத் தம்மை அர்ப்பணித்திருக்கின்ற ஒவ்வொருவரும் செயலளவில் வக்∴பினுடைய அமைப்பில் இணைந்திருந்தாலும் சரி அல்லது இணையாதிருந்தாலும் சரி, அதாவது ஜமாஅத்தின் நிரந்தரமான பணியாளராக அவர் பணி செய்து வந்தாலும் சரி அல்லது பணி செய்யாமலிருந்தாலும் சரி, எந்நிலையிலும் அவர் வாழ்வை அர்ப்பணித்தவராக இருக்கின்றார் என்பதை அவர் கவனத்தில் கொள்ள வேண்டும். அவரது ஒவ்வொரு சொல்லும் செயலும் தமது வாழ்வை ஜமாஅத்திற்காக அர்ப்பணித்திருப்பவரின் உயர்ந்த தரத்திற்கு ஏற்ப இருக்க வேண்டும். இதில் எல்லாவற்றையும் விட பெரிய விஷயம் தக்வாவைப் பேணுவதாகும். அதை எப்போதும் உங்கள் கண் முன் நிறுத்த வேண்டும். அதாவது நாம் தக்வாவில் நிலைபெற்றிருக்க வேண்டும். நாம் செய்கின்ற ஒவ்வொரு பணியையும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகச் செய்பவர்களாக இருக்க வேண்டும். நாம் செய்கின்ற ஒவ்வொரு பணியையும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகச் செய்பவர்களாக இருக்க வேண்டும். குறிப்பாக இந்த சமூகத்தில் சுதந்திரம் என்ற பெயரில் பல விஷயங்கள் நடைபெறுவதை நாம் பார்க்கின்றோம். சுதந்திரம் என்ற பெயரில் நல்லொழுக்கம் சீர்குலைவதையும் தான்தோன்றித் தனமாக நடப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதையும் நாம் பார்க்கின்றோம். இன்றைய நாட்களில் இது பொதுவாக ஆகிக் கொண்டே இருக்கிறது. எனவே இத்தகைய சூழ்நிலைகளில் நம்மை நாமே எல்லா வகையிலும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். ஒரு சிறந்த முன்மாதிரியைக் காட்டுபவர்களாக நாம் இருக்க வேண்டும். அதைப் பார்க்கின்ற மற்ற இளைஞர்களும் சிறுவர்களும் நம்மிடமிருந்து நல்ல படிப்பினையை பெற வேண்டும். அத்தகைய நல்ல முன்பாதிரியை நாம் அவர்களுக்குக் காட்ட வேண்டும். இவ்வாறே ஒவ்வோர் அஹ்மதி சிறுவர்களும் இளைஞர்களும் நல்ல முன்மாதிரியை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். அது பிறரது சீர்திருத்தத்திற்கு காரணமாக அமைய வேண்டும். எனவே இந்த விஷயத்தை எப்போதும் நினைவில் வையுங்கள். நாம் நமது வாழ்க்கையை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது போதனைக்கு ஏற்பவும் அவர்களது கட்டளைக்கு ஏற்பவும் அமைத்துக் கொள்ள வேண்டும். உண்மையான இஸ்லாமிய முன்மாதிரியை வெளிப்படுத்திக் காட்டுபவர்களாக நாம் இருக்க வேண்டும். இது எப்போது சாத்தியம் என்றால் நீங்கள் எப்போதும் கிலா∴பத்துடன் நன்றி உணர்வுள்ள தொடர்பு உடையவர்களாக இருக்க வேண்டும். காலத்தின் கலீ∴பா கூறுகின்ற ஒவ்வொரு போதனைக்கு ஏற்பவும் முழுமையாக செயல்பட முயற்சி செய்பவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். நீங்கள் இதைச் செய்து விட்டால் நீங்கள் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றியவர்களாக ஆகி விடுவீர்கள். வக்∴பே நவ் இளைஞர் என்ற முறையில் நீங்கள் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றியவர்களாக ஆகி விடுவீர்கள். அல்லது உங்களது பெற்றோர்கள் நீங்கள் பிறப்பதற்கு முன்னர் உங்களை இறைவழியில் வக்∴ப் செய்து இறைவனோடு செய்த அந்த உடன்படிக்கையை நிறைவேற்றியவர்களாக ஆவார்கள். (1 ஏப்ரல் 2012 அன்று இஸ்மாயீல் என்ற பத்திரிகை தொடங்கப்பட்டபோது ஹுஸுர் அவர்கள் அனுப்பிய தூதுச் செய்தி அதன் முதல் இதழில் 5, 6 ஆகிய பக்கங்களில் இடம் பெற்றிருக்கின்றது.)

இவ்வாறு ஹுஸுர் அவர்கள் தமது உரையில், வக்∴பே நவ் திட்டத்தில் பங்கு பெறுபவர்களிடத்தில் இருக்க வேண்டிய தனிச் சிறப்புகளைப் பற்றியும் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். ஹுஸுர் அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள். வக்∴பே நவ் திட்டத்தின் கீழ் ஜமாஅத்திற்காக அர்ப்பணமாகி உள்ள ஒவ்வொருவருக்கும் இந்த பொறுப்பு இருக்கின்றது. அதாவது தமது அன்றாட வாழ்க்கை அவர் எவ்வாறு வடிவமைத்துக் கொள்ள வேண்டுமென்றால் அது அல்லாஹ்வின் வழியில் தன்னை அர்ப்பணித்துள்ள ஒருவரது சிறந்த வழிமுறையாகவும் சிறந்த நடைமுறையாகவும் தென்பட வேண்டும். எனவே அவசியமானது என்னவென்றால், நீங்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்காக எப்போதும் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். மேலும் கழிக்கின்ற ஒவ்வொரு நாளும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பில் நீங்கள் முன்னேறிக் கொண்டிருக்கின்ற நாளாகக் கழிய வேண்டும். அத்துடன் ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோடு நன்றி உணர்வுடன் நடந்து கொள்பவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். கிலா∴பத்திற்கு முழுமையாக் கட்டுப்படுவதை உங்களது வாழ்வின் ஓர் அங்கமாக நீங்கள் ஆக்கிக் கொள்ள வேண்டும். ஜமாஅத்தின் அமைப்பிற்கு உங்களுடைய பார்வையில், மேலும் உங்களுடைய வாழ்வில் மற்ற எல்லாவற்றையும் விட அதிகமான முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். ஜமாஅத்தின் அமைப்பை எல்லாவற்றையும் விட மிகப் பிரியமானதாக நீங்கள் கருத வேண்டும். அப்போதுதான் ஒரு வக்∴பே நவ் இளைஞரிடம் இருக்க வேண்டிய சிறப்புத்தன்மைகள் உங்களிடம் இருக்கின்றன என்று கருதப்படும். அதன் மூலமாக வக்∴பே நவ் உடைய மகத்தான பொறுப்புகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்குரிய தகுதி உங்களிடம் இருக்கின்றது என்று கருதப்படும். நான் ஏற்கனவே கூறியது போன்று நீங்கள் உங்களது வாழ்க்கையை இவ்வாறு வடிவமைத்துக் கொள்ள வேண்டும். இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை செயல்படுத்தக் கூடியவர்களாக இருப்பதைத்தான் உங்களுடைய வாழ்க்கை உங்களிடம் எதிர்பார்க்கிறது. நீங்கள் எழுந்து நின்றாலும் சரி, அமர்ந்தாலும் சரி, அல்லது ஒரு சபையில் இருந்தாலும் சரி, அல்லது எங்கு நீங்கள் நடந்து சென்று கொண்டிருந்தாலும் உங்களுடைய நடைமுறை தெளிவான முறையில் உயர்ந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லை என்றால், மக்கள் உங்களுக்கு எதிராக விரலை உயர்த்தி ஆட்சேபனை செய்யக்கூடிய நிலையில் நீங்கள் இருந்தால், இந்த வக்∴பே நவ் இளைஞரிடம் இந்த ஒழுக்கச் சீர்கேடு இருக்கின்றது என்று கூறினால், அல்லது இந்த வக்∴பே நவ்விற்குரிய உயர்வான எதிர்பார்புகளை நிறைவேற்றவில்லை. அந்த உயர்ந்த தரத்தை நீங்கள் அடையவில்லை என்றே அதற்குப் பொருள். (26 பிப்ரவரி 2011 யூ.கே. -வில் நடைபெற்ற வாகி∴பீனே நவ்விற்கான இஜ்திமாவில் ஹுஸுர் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவில் இருந்து)

மேலும் ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எப்போதும் நீங்கள் வக்∴பே நவ் தொடர்பாக நீங்கள் செய்துள்ள உடன்படிக்கையை நினைவில் கொள்ளுங்கள். இந்த உடன்படிக்கையை நீங்கள் அல்லாஹ்விடத்தில் செய்துள்ளீர்கள். அந்த இறைவன் மறைவான செய்திகளை அறிந்தவனாக இருக்கின்றான். அவனிடத்தில் எந்த விஷயத்தையும் நீங்கள் மறைக்க முடியாது. அவன் உங்களது ஒவ்வொரு செயலையும் பார்த்துக் கொண்டிருக்கின்றான். அல்லாஹ்வும் உங்களிடத்தில் கேள்வி கேட்பான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நீங்கள் செய்திருக்கின்ற வாக்குறுதி தொடர்பாக நிச்சயமாக உங்களிடம் கேள்வி கேட்பான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நீங்கள் செய்திருக்கின்ற வாக்குறுதி தொடர்பாக நிச்சயமாக உங்களிடத்தில் கேள்வி கேட்கப்படும். எனவே இது ஒரு மிகப்பெரிய பொறுப்பாக இருக்கின்றது. இந்த மிகப்பெரிய பொறுப்பு ஜமாஅத்திற்காக தம்மை அர்ப்பணித்திருக்கின்ற இளைஞர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கின்றது. எனவே நீங்கள் இந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக, இந்த உடன்படிக்கையின் முக்கியத்துவத்தையும் அதன் உண்மையான குறிக்கோளையும் நீங்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். உங்களில் பலரும் விரைவில் செயல் களத்தில் அடியெடுத்து வைக்க இருக்கின்றீர்கள். அல்லது அடியெடுத்து வைத்து விட்டீர்கள். ஜமாஅத்திற்காகப் பணி செய்ய ஆரம்பிக்க இருக்கின்றீர்கள். அல்லது முதலிலேயே இந்த பணிகளைச் செய்ய ஆரம்பித்து வீட்டீர்கள். எனவே ஒவ்வொரு நாளும் உங்களை நீங்களே ஆய்வு செய்து பார்க்க வேண்டியது கட்டாயமானதாகும். உண்மையிலேயே நீங்கள் உங்களுடைய உடன்படிக்கையை நிறைவேற்றி விட்டீர்கள் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். உண்மையிலேயே நீங்கள் அல்லாஹ்விற்கு அருகில் சென்று கொண்டிருக்கின்றீர்கள். இறை நெருக்கத்தைப் பெறுகின்றீர்களா, தக்வாவின் வழிகளில் முன்னேறிச் செல்கின்றீர்களா என்பதைப் பார்க்க வேண்டும். இந்த கேள்விகளுக்கான பதில் ‘இல்லை’ என்று இருந்தால், நீங்கள் ஜமாஅத்திற்காக உங்களை வக்∴ப் செய்ததன் மூலமாக எந்தவொரு பயனும் ஏற்படாது. (6 மே 2012 யூ.கே. -வில் நடைபெற்ற வக்∴பே நவ்வின் வருடாந்திர இஜ்திமாவில் ஹுஸுர் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவில் இருந்து)

அன்பார்ந்த சகோதரர்களே! இது நமக்குக் கிடைத்திருக்கின்ற மிகப்பெரும் நற்பாக்கியம் ஆகும். நமது எஜமானராகிய ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் அவர்கள் நமக்காக இந்த வகுப்பில் வந்து, நம்மோடு அமர்ந்து இந்த வகுப்பை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இத்தகைய ஒரு நற்பேற்றை அவர்கள் நமக்கு வழங்கியிருக்கின்றார்கள். தமது வழிகாட்டல்களையும் நமக்கு வழங்கி வருகின்றார்கள். அவர்கள் கூறுகின்ற வழிகாட்டலுக்கு ஏற்ப நாம் செயல்படுவதாக இருந்தால் எதிர்காலத்தில் மிகப்பெரிய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தகுதியுடையவர்களாக நாம் ஆகிவிடுவோம்.

ஹுஸுர் அவர்கள் தமது ஒரு சொற்பொழிவில் இது தொடர்பாகப் போதனை செய்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: இப்போது இஸ்லாத்தின் மீது எல்லா திசையிலிருந்தும் தாக்குதல் தொடுக்கப்பட்டு வருகின்றது. இஸ்லாத்திற்கு எதிராக பல விஷயங்களும்

கூறப்படுகின்றது. பல விஷயங்களும் எழுதப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், நான் உங்களுக்கு இஸ்லாத்தை தற்காப்பதற்காக நீங்கள் எழுந்து நிற்க வேண்டும் என்று கட்டளையிடுகின்றேன். ஒவ்வொரு நபரும் இஸ்லாத்தின் போதனைகளைத் தற்காப்பதற்காக முழுமையான முறையில் தமது கடமையை நிறைவேற்ற வேண்டும். ஒரு வக்ஃபே நவ் இளைஞருடைய பங்கு மற்றவர்களை விட இதில் மிகப்பெரிய அளவில் இருக்கின்றது. அதற்குக் காரணம் என்னவென்றால், வக்ஃப் செய்திருக்கின்ற இளைஞர்கள் மற்றும் சிறுவர்களுடைய பெற்றோர்கள் இவ்வாறு உடன்படிக்கை செய்திருக்கின்றார்கள். அதாவது அவர்களது பிள்ளைகளுடைய வாழ்வின் ஒவ்வொரு நொடியும் இஸ்லாத்திற்குத் தொண்டாற்றுவதற்காக எப்போதும் அர்ப்பணமாகி இருக்கும் என்று அவர்கள் உடன்படிக்கை செய்திருந்தார்கள். பிறகு 15 வயது நிரம்பிய பிறகு இந்த உடன்படிக்கை ஒவ்வொரு வக்ஃபே நவ் இளைஞரிடமிருந்து மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றது. அதாவது 15 வயது நிரம்பிய உடன் அவர் இந்த உடன்படிக்கையை புதுப்பித்துக் கொள்கின்றார். தான் இறைவழியில் அர்ப்பணமாகி இருப்பதை அவர் உறுதி செய்கின்றனர். அதாவது எல்லா நொடியும் அவர் மார்க்கத்திற்குத் தொண்டாற்றுவதற்காக ஆயத்தமாக இருக்கின்றார் என்று கூறுகின்றார். எனவே நீங்கள் உங்களுடைய இந்த உடன்படிக்கையை நிறைவேற்றியவாறு உங்களுடைய பொறுப்புகளையும் நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். இவ்வாறு நீங்கள் வாழ்ந்து வருகின்ற மேற்கத்திய சமுதாயத்திற்கு ஒளி வழங்கக்கூடிய தீபங்களாக நீங்கள் மாறிவிட வேண்டும். உங்களிடத்தில் உலகத்தைப் பற்றிய பேராசையும் இருக்கக் கூடாது. உலகத்திலுள்ள கேளிக்கைகளில் ஈடுபடுகின்ற நிலையும் இருக்கக் கூடாது. மாறாக உண்மையிலேயே நீங்கள் ஆன்மீக ஒளியினால் ஒளிமயமானவர்களாக இருக்க வேண்டும். பிறருக்கும் அதன் மூலமாகவே வழிகாட்டுபவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். எனவே நான் இவ்வாறு உங்களுக்காக துஆ செய்கின்றேன். இந்த ஒளி உங்கள் எல்லாரது வாழ்க்கையிலும் உருவாகட்டும். இந்த ஒளியின் மூலமாக உங்களுக்கு வெற்றிகள் கிடைத்துக் கொண்டே இருக்கட்டும். இன்ஷா அல்லாஹ்! நீங்கள் எனது கவலையையும் எனக்குப் பிறகு வரக்கூடிய கலீஃபாக்களின் கவலைகளையும் அகற்றுபவர்களாக இருக்க வேண்டும். ஒரு தீபத்திலிருந்து இன்னொரு தீபம் ஏற்றப்படுவது போன்று ஒருவரிடம் நல்ல முன்மாதிரி இருந்தால் அதைக் காண்கின்ற மற்றவர்களும் அதைப் பின்பற்றி நடக்கின்றனர். எனவே உங்களில் யார் பெரியவர்களாக இருக்கின்றீர்களோ அவர்கள் இந்த வக்ஃபே நவ் திட்டத்தின் முதல் கனிகளாக இருக்கின்றீர்கள். எனவே நீங்கள் சிறந்த, அழகிய முன்மாதிரியைக் காட்ட வேண்டிய நிலையில் இருக்கின்றீர்கள். நல்ல விஷயங்களின் பக்கம் பிறரது கவனத்தை ஈர்க்கக் கூடியவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். எனவே நான் உங்களிடம் கூறுகின்றேன். நீங்கள் முன்னேறிச் செல்லுங்கள். நல்ல விஷயங்களின் பக்கம் மக்களுடைய கவனத்தைத் திருப்பக்கூடிய வழிகாட்டிகளாக நீங்கள் ஆகிவிட வேண்டும். நீங்கள் எந்த செயல்களத்தில் இருந்தாலும் சரி, எந்தகளத்தில் நீங்கள் பணி செய்தாலும் உங்களுடைய உயர்வான தரத்தை, மேலும் நீங்கள் செய்கின்ற பணியில் மிகச் சிறந்த நிலையைக் காட்டக் கூடியவராக இருக்க வேண்டும். உங்களுடைய ஒளி எல்லாருக்கும் தென்படுகின்ற வகையில் உங்களுடைய செயல் இருக்க வேண்டும். எனவே அத்தகைய முன்மாதிரியை நீங்கள் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். இதன் மூலமாக இந்த தலைமுறை மட்டுமல்லாமல் வருங்கால தலைமுறையினரும் கூட உங்களுக்காக துஆ செய்வார்கள். அல்லாஹ் உங்களுக்கு இந்த பொறுப்புகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. (26 பிப்ரவரி 2011 யூ.கே.-வில் நடைபெற்ற வக்ஃபே நவ்வின் வருடாந்திர இஜ்திமாவில் ஹுஸுர் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவில் இருந்து)

***கேள்வி பதில் நிகழ்ச்சி:***

இதற்குப் பதில் ஹுஸுர் அவர்கள் வகுப்பில் இருந்த வக்ஃபே நவ் காதிம்களுக்கு கேள்வி கேட்பதற்கான அனுமதியை வழங்கினார்கள். ஒரு வக்ஃபே இளைஞர் இவ்வாறு கேள்வி கேட்டார்: இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்கின்றவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். அதாவது திருக்குர்ஆனில் எந்த வசனங்களில் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு போரிடுவதற்கான அனுமதியை வழங்கியிருக்கின்றானோ அது தொடர்பாக எதிரிகள் ஆட்சேபனை செய்யும்போது நாம் இவ்வாறு அவர்களுக்குப் பதில் கூறுகின்றோம். அதாவது மக்கத்து காஃபிர்கள் முஸ்லிம்கள் மீது கொடுமை இழைத்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் ஏனைய முஸ்லிம்கள் மீது கொடுமை இழைத்து அவர்களை மக்காவில் இருந்தே வெளியேற்றினர். பிறகு மதீனாவிலும் கூட அவர்களை நிம்மதியாக இருக்க விடவில்லை. எனவே அல்லாஹ் தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காக அவர்களுக்கு போர் புரிவதற்கான அனுமதியை வழங்கினான் என்று நாம் அவர்களது ஆட்சேபனைக்கு பதில் கூறுகின்றோம். அப்போது எதிரிகள் நம்மிடம் இவ்வாறு கேட்கின்றார்கள்: அதாவது உங்களுடைய வாதம், திருக்குர்ஆனுடைய இந்த போதனையும் இந்த கட்டளையும் இருக்கின்றது. எனவே இன்றைய கால சூழ்நிலையில் இந்த வசனம் எவ்வாறு நமக்கு வழிகாட்டும்? இப்போது இருக்கின்ற இந்த வாழ்க்கை நிலைமைக்கு ஏற்ப இந்த வசனம் எவ்வாறு நமக்கு வழிகாட்டும் அல்லது இந்த வசனத்துடன் இன்றைய வாழ்விற்கு எந்த தொடர்பு இருக்கின்றது?

இந்த கேள்விக்கு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: முதல் விஷயம் என்னவென்றால், இம்மக்கள் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்கின்றார்கள். அவ்வாறு ஆட்சேபனை செய்கின்றவர்களிடத்தில் நீங்கள் ஒரு விஷயத்தைக் கூறுங்கள். அதாவது திருக்குர்ஆனில் 2000 -க்கும் மேற்பட்ட வசனங்கள் இருக்கின்றன. அதில் சில வசனங்களில் ஜிஹாத் பற்றிய குறிப்பு இருக்கின்றது. ஜிஹாத் மற்றும் கிதால் ஆகிய இந்த இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கின்றது. ஒவ்வொரு ஜிஹாதும் கிதால் ஆகாது. (அதாவது ஜிஹாத் என்றால் அல்லாஹ் அனுமதித்து செய்யக் கூடிய போரைக் குறிக்கின்றது. கிதால் என்றால் சாதாரணமாகச் செய்யக் கூடிய போரைக் குறிக்கின்றது) உண்மையில், சாதாரணமாக நடைபெறுகின்ற போர்களுக்கே கிதால் என்று கூறப்படுகின்றது. மறுபுறம், பைபிளை நாம் பார்க்கின்றபோது திருக்குருஆனை விட ஏறத்தாழ 3 மடங்கு அதிகமாக அதாவது ஏறத்தாழ ஐந்தாயிரத்தை விட அதிகமான வசனங்கள் பைபிளில் இருக்கின்றன. அவற்றில் கடுமையாக நடந்து கொள்வது தொடர்பாகவும் போர் தொடர்பாகவும் கொலைகள், கொள்ளைகள் செய்வது தொடர்பாகவும் கட்டளை இருக்கின்றது. பிறகு பைபிள் தொடர்பாக கிறித்தவர்கள் பேசும்போது அவர்கள் கூறுகின்றார்கள். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தை காட்டுங்கள் என்று பைபிளில் போதனை இருக்கின்றது என்று கூறுகின்றார்கள். மறுபுறம் நாம் பார்ப்பதாக இருந்தால், பைபிளின் 5000 வசனங்களில் 290 அல்லது 291 வசனங்கள் போர் புரிவது தொடர்பாக இருக்கின்றன. இது அவர்களுக்கு நாம் கூற வேண்டிய முதல் பதிலாகும்.

பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்: இரண்டாவது விஷயம் என்னவென்றால் 13 வருடங்கள் வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எதிரிகள் மிகப்பெரும் கொடுமைகளை இழைத்தனர். ஆனால் அல்லாஹ் அவர்களுக்கு அந்த நிலையிலும் போருக்கான அனுமதியை வழங்கவில்லை. இந்த அநீதி அளவு கடந்து சென்ற போது, ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்களுக்கு மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து செல்ல வேண்டியது வந்தது. ஹிஜ்ரத் செய்து சென்ற பிறகு ஒன்றரை ஆண்டுகள் கழித்து மீண்டும் மக்கத்து காஃபிர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தினர். அப்போதுதான் திருக்குர்ஆனின் இந்த வசனம் இறங்கியது. அதில்தான் முஸ்லிம்கள் தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காகப் போரிடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. சூரா அல் ஹஜ்ஜினுடைய 40 மற்றும் 41 -வது வசனங்களில் இந்த கட்டளை இருக்கின்றது. அதாவது இப்போது நீங்கள் போர் செய்யலாம் என்று இறைவன் கூறுகின்றான். அந்த போரும் கூட அவர்களது மார்க்கத்தைப் பாதுகாப்பதற்காகவே செய்யப்பட்டது. இந்த வசனங்களில் இவ்வாறு வருகின்றது. எதிரிகளுடைய தாக்குதலின் விளைவாக எந்தவொரு ஆலயமும் எஞ்சி இருக்காது. எந்தவொரு யூத மடமும் எஞ்சி இருக்காது. எந்தவொரு கோவிலும் எஞ்சி இருக்காது. எந்தவொரு பள்ளிவாசலும் எஞ்சி இருக்காது. எனவே முஸ்லிம்களுக்குப் போரிடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்றால் அத்துடன் எல்லா மதங்களையும் பாதுகாப்பதற்கான அனுமதியும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்றே இதைக் கூற வேண்டும்.

ஹுஸுர் அவர்கள் தொடர்ந்து இவ்வாறு கூறினார்கள்: உண்மையான இஸ்லாமிய வரலாற்றிலிருந்து இதுவே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சில இஸ்லாமிய பழைமைவாதிகள் தாமாகவே வரலாறை எழுதியிருக்கின்றார்கள். அதைப் படிக்கும்போது, இஸ்லாம்தான் தாக்குதல் நடத்தியது போன்று தெரியும். ஆனால் இஸ்லாம் தாக்குதல் நடத்துவதில் ஒருபோதும் முந்திக் கொள்ளவில்லை. இஸ்லாம் தரப்பிலிருந்து போர் முதலில் செய்யப்படவே இல்லை. இஸ்லாத்தை அழிப்பதற்காகவும் முஸ்லிம்கள் மீது அநீதி இழைப்பதற்காகவும் தாக்குதல் தொடுக்கப்படாத வரை பெருமானார் (ஸல்) அவர்கள் திரும்பி வந்து கொண்டிருந்த சமயத்தில் நாம் இப்போது சிறிய ஜிஹாதிலிருந்து பெரிய ஜிஹாதின் பக்கம் திரும்புகின்றோம் என்று கூறினார்கள். அதாவது பெரிய ஜிஹாது என்று அவர்கள் குறிப்பிட்டது திருக்குர்ஆனின் போதனைகளைப் பரப்புவது மற்றும் தப்லீக் செய்கின்ற ஜிஹாதாகும்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 24 May 2018 Issue No. 21

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஹுதைபிய்யா உடன்படிக்கை ஏற்பட்ட பிறகு, அமைதியான மற்றும் நிம்மதியான காலகட்டம் இருந்து வந்தது. அப்போது இஸ்லாம் எந்த அளவு பரவியது என்றால் போர் நடைபெற்ற காலங்களில் அந்த அளவு பரவவில்லை என்பது வரலாற்று உண்மையாகும். இது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. எனவே இஸ்லாம் போரால் அல்லது தீவிரவாதத்தால் பரவவில்லை என்பதை இது நிரூபிக்கின்றது. ஹுஸூர் அவர்கள் மேலும் கூறினார்கள்: இதற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது கிலா∴பத் காலகட்டத்தில் ஈரான் தாக்குதல் நடத்தியபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவர்களது தாக்குதலுக்கு பதிலடி கொடுத்தார்கள். அப்போது முஸ்லிம் படைகள் ஈரானுடைய எல்லைப் புறத்தில் சென்று அமர்ந்தது. அந்த சமயத்திலும் கூட ஈரான் இராணுவம் இஸ்லாமிய படைகள் மீது தாக்குதல் நடத்திக் கொண்டே இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது படைவீரர்களிடமும் படைத்தளபதி இடமும் என்ன கூறினார்கள் என்றால் நீங்கள் அந்த படைக்குள் நுழைந்து அவர்களை அதிகமாகத் தாக்கக் கூடாது. ஆனால் உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது கட்டளை எவ்வாறிருந்தது என்றால் நீங்கள் அவர்களை அழிக்க முற்படக் கூடாது. அதே சமயத்தில் உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். ஆனால் அந்த ஈரானியப் படை இஸ்லாமிய படைகள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்திக் கொண்டே இருந்தது. அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவர்கள் ஏன் தொடர்ந்து தாக்குதல் நடத்திக் கொண்டே இருககின்றார்கள்? என்று படைத் தளபதியிடம் கேட்டார்கள். அப்போது படைத்தளபதி கூறிய பதில் என்னவென்றால் நீங்கள் எங்களது கைகளைத் தடுத்து வைத்திருக்கின் -றீர்கள். அவர்கள் மீது அதிகமாகத் தாக்குதல் நடத்துகின்றனர் என்று கூறினார். அதற்குப் பிறகு காதிஸியா போர் நடைபெற்றது. அந்த போரும் கூட முஸ்லிம்கள் மீது நடைபெற்ற அநீதியின் விளைவாகவே நடந்தது. அதற்குப் பிறகு முஸ்லிம் படைகள் முன்னேறிச் சென்றன. பிறகு இறுதி வரை முன்னேறிக் கொண்டே இருந்தன. அந்த நிலையிலும் கூட வலுக்கட்டாயமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள எவரையும் யாரும் வற்புறுத்தவில்லை என்பதை வரலாறு நிரூபிக்கின்றது.

ஹுஸூர் அவர்கள் தொடர்ந்து இவ்வாறு கூறினார்கள்: இப்போது எஞ்சியிருக்கின்ற விஷயம் என்னவென்றால் திருக்குர்ஆனுடைய போதனைகள் எல்லா காலகட்டத்திற்கும் உரிய போதனையாகும் என்பதாகும். இது முற்றிலும் சரியானதுதான். திருக்குர்ஆனுடைய போதனைகள் எல்லா காலகட்டத்திற்கும் உரிய போதனையாகும். திருக்குர்ஆன் ஒவ்வொரு சிறிய சாத்தியக்கூறையும் ஒவ்வொரு பெரிய சாத்திக்கூறையும் தன்னகத்தே கொண்டதாக இருக்கின்றது. அதாவது திருக்குர்ஆனுடைய போதனைகள் எல்லாவற்றையும் சூழ்ந்து நிற்கின்றது. எனவே திருக்குர்ஆன் எடுத்து வைக்கின்ற அந்த ஷரீஅத்தானது ஒரு பரந்த ஷரீஅத்தாக இருக்கின்றது. அது எல்லா விதமான சாத்தியக்கூறுகளையும் முன்னிறுத்தியவாறு தனது போதனைகளை வழங்கியிருக்கின்றது. அது முழுமை பெற்ற போதனையாக இருக்கின்றது. ஏதாவது ஒரு நிலையில் நீங்கள் போரிட வேண்டியது வந்தால் எவ்வகையிலும் பிறர் மீது நீங்கள் அநீதியிழைக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று திருக்குர்ஆன் கூறுகின்றது.

அடுத்து புகாரியில் இவ்வாறு ஹதீஸ் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு காலம் வரும், அப்போது மஹ்தி மஸீஹ் அவர்கள் தோன்றுவார்கள். அவர்கள் தோன்றி யதஹுல் ஹர்ப், அதாவது அவர்கள் போரை நிறுத்துவார்கள். அதாவது அவர்களுடைய காலத்தில் போர்கள் முடிவுற்று விடும், போர்கள் நடைபெறாது என்பது இந்த ஹதீஸிலிருந்து தெரிய வருகின்றது. இதன் கருத்து என்னவென்றால் மஸீஹ் தோன்றும் காலத்தில் மார்க்கதிற்காகப் போர் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. மார்க்கப் போர்கள் இஸ்லாத்தை அழிப்பதற்காகத் தாக்குதல் நடைபெறாது. அல்லது ஈரானியர்கள் இஸ்லாமிய படைகளை எதிர்த்தது போன்று அந்த காலத்தில் முஸ்லிம்களை எதிர்த்து எவரும் போர் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. மார்க்கப் போர்கள் நடைபெறாது. எதிரிகள் தரப்பிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலக்கட்டத்தில் நடந்தது போன்று இஸ்லாத்தை அழிப்பதற்காகத் தாக்குதல் நடைபெறாது. அல்லது ஈரானியர்கள் இஸ்லாமிய படைகளை எதிர்த்தது போன்று அந்த காலத்தில் முஸ்லிம்களை எதிர்த்து எவரும் போர் செய்யப்போதில்லை. எனவே திருக்குர்ஆன் எல்லா காலகட்டத்திற்குமுள்ள மிகச் சரியான போதனையைத் தான் வழங்கியிருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஈஸா மஸீஹ் வரும்போது அவர் போர்களைத் தாமதப்படுத்துவார். அதுமட்டுமல்ல; அந்த சமயத்தில் யார் போர் புரிவாரோ அவர் நிராகரிப்பவர்களின் கைகளால் இழப்பிற்கு ஆளாவார் என்றும் கூறியிருந்தார்கள். அவர்கள் இவ்வாறு கூறியதற்கான காரணம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மஸீஹ் தோன்றும்போது யதஹுல் ஹர்ப், அவர்கள் போரை நிறுத்துவார்கள் என்று கூறியிருந்தார்கள். எனவே இந்த முன்னறிவிப்பிற்கு எதிராக எவர் போரிடுவதற்காகச் செல்வாரோ அவர் ஹஸ்ரத் மஸீஹே மவூது(அலை) அவர்கள் கூறியிருப்பது போன்று கா∴பிர்களின் கைகளால் மிகுந்த இழப்பிற்கு ஆளாவார். ஏனென்றால் இப்போது இஸ்லாத்தின் மீது மார்க்க அளவில் எந்தவொரு தாக்குதலும் நடத்தப்படவில்லை. அல்லாஹ் எங்கு போர் செய்யுங்கள் என்று கூறியிருக்கின்றானோ அல்லது ஜிஹாது செய்யுங்கள் என்று கூறியிருக்கின்றானோ அத்துடன் இந்த ஆறுதலையும் வழங்கியிருக்கின்றான். அதாவது யார் போர் புரிகின்றார்களோ அல்லது ஜிஹாது செய்கின்றார்களோ அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்ற வாக்குறுதியையும் அவன் வழங்கியிருக்கின்றான். இந்த காலத்தில் எந்த முஸ்லிம் நாடு பிறரை வெற்றி கொண்டிருக்கின்றது? அல்லது எத்தகைய வெற்றிகள் முஸ்லிம்களுக்குக் கிடைத்திருக்கின்றது? போர்கள் புரிந்ததன் காரணமாக முஸ்லிம்களுக்கு என்ன வெற்றிகள் கிடைத்திருக்கின்றன? எந்த வெற்றியும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆக இதன் கருத்து என்னவென்றால், இவர்கள் செய்வது ஜிஹாது அல்ல. இது அல்லாஹ்வின் பெயரால் செய்யப்படுகின்ற போர்கள் அல்ல. அசல் விஷயம் என்னவென்றால், மஸீஹ் வருகின்றபோது அவர் அமைதியையும் அன்பையும் நேசத்தையும் பரப்பக்கூடியவராக இருப்பார். எவ்வாறு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அன்பையும் நேசத்தையும் அமைதியையும் பரப்பினார்களோ அவ்வாறே வரவேண்டிய அந்த ஈஸாவும் தமது போதனைகளின் மூலமாக அன்பை, நேசத்தையும், அமைதியை உலகில் பரப்புவார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், நானும் இந்த முதல் மஸீஹைப் பின்பற்றியே அவரைப் போன்றே, அவரை ஒத்தவராகவே வந்திருக்கின்றேன் என்றே வாதம் செய்தார்கள். ஏற்கனவே தோன்றிய மஸீஹ், மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு தோன்றிய மஸீஹாக இருந்தார்கள். நான் முஹம்மதிய மஸீஹாக இருக்கின்றேன். நானும் கூட அன்பையும் நேசத்தையும் பரப்புவதற்கே வந்துள்ளேன். எனவே போர்கள் முடிவிற்கு வந்து விட்டன என்று அவர்கள் கூறினார்கள். எனினும் ஏதாவதொரு சாத்தியக்கூறு வருங்காலத்தில் இருந்தால், அதாவது மார்க்க ரீதியாக இஸ்லாத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், இஸ்லாத்தை அழிப்பதற்கான முயற்சிகள் செய்யப்பட்டால், அப்போது அந்த சமயத்தில் ஜிஹாது தொடர்பான இந்த வசனங்கள் அமல்படுத்தப்படும். ஆனால் இப்போது அத்தகைய அந்த சூழ்நிலையும் இல்லை. எனவே இந்த வசனங்கள் இப்போது நடைமுறைக்கு வராது. நாட்டினுடைய சட்டம் தயார் செய்யப்படும் போது, அதிலும் கூட நாட்டின் ஒவ்வொரு குடிமகனையும் பிடித்து அவனுக்கு தண்டனை வழங்க வேண்டும் அல்லது தூக்கிலிட வேண்டும் என்று கூறப்படுவதில்லை. அந்த சட்டத்தின் பொருள் அப்படிப்பட்டதாக இருப்பதில்லை.

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: வரக்கூடிய அந்த மஸீஹுடைய போர்கள் தாமதப்படுத்தப்படும். ஏன் தாமதப்படுத்தப்படும்? ஏனென்றால் மார்க்கம் என்ற அளவில் இஸ்லாத்தின் மீது எந்த தாக்குதலும் அப்போது நடைபெறாது. அவ்வாறு எப்போதாவது நடைபெற்றால் திருக்குர்ஆனுடைய வசனங்கள் நமக்கு என்ன கட்டளையிடுகின்றது என்றால், அந்த சமயத்தில் நமக்கு போரிடுவதற்கான அனுமதியை அது வழங்கும். அந்நிலையில் அல்லாஹ் நமக்கு வெற்றிக்கான வாக்குறுதியையும் உத்திரவாதத்தையும் வழங்குவான். அஸ்ஸலாமு அலைக்கும்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad